
விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 066 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 11 வெள்ளிக்கிழமை (23.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே




## வெள்ளை ஈ பரவல் திட்டமிட்ட சதியா?
# வட பகுதியில் தென்னை வளம் முற்றாக அழியும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

வடபுலத்தில் உள்ள தென்னை மரங்களில் அதிவேகமாகப் பரவி வரும் வெள்ளை ஈக்களால் தென்னை மரங்கள் முற்றுமுழுதாக அழிவடையும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளன.

வட பகுதியில் தற்போது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் உள்ள தென்னை மரங்களில் வெள்ளை ஈக்களின் தொற்று வேகமாகப் பரவி வருகிறது. 15

# கச்சதீவு திருவிழா
## இன்று ஆரம்பம்



15

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி
# 1994 - 96 காலத்துக்குட்பட்டவை

## மீட்கப்பட்ட எச்சங்கள் தொடர்பில் தொல்லியல் பேராசிரியர் அறிக்கை



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனித புதை குழியில் இருந்து மீட்கப்பட்ட எச்சங்கள் 1994ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குரியவை என அகழ்வுப் பணியில் ஈடுபட்ட தொல்லியல் திணைக்களப் பேராசிரியர் ராஜ் சோமதேவவின் இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04ஆம் பக்கம் பார்க்க)

# உட்கட்சி முரண்பாடுகளை களைந்து அடுத்த கட்ட நகர்வுகளுக்கு விரையுங்கள்

## சிறீதரன் எம்.பியிடம் இலங்கைக்கான இந்தியத் தூதுவர்



(யாழ்ப்பாணம்)

கட்சியின் உள்ளக முரண்பாடுகளைக் களைந்து அடுத்த கட்ட நகர்வுகளை விரைந்து மேற்கொள்ளுமாறு சிறீதரன் எம்.பியிடம் 15

## காதலர் தினத்தன்று மனைவிக்குப் பரிசளிக்க
### 29 பவுண் நகைகளை திருடிய கணவன் கைது



(யாழ்ப்பாணம்)

காதலர் தினத்தன்று தனது மனைவிக்குப் பரிசளிப்பதற்காக 29 பவுண் நகைகளைத் திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய 15

## திடீர் சுற்றிவளைப்பு
# கடந்த ஒரு மாதத்தில் யாழில் 531 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒரு மாத கால பகுதிக்குள் யாழில் 531 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுக்களில் யாழ்ப்பாணத்தில் தேடப்பட்டு வந்த 15

## துன்னாலையில் வாள்வெட்டு
### இருவர் படுகாயம்

(கரணவாய்)

துன்னாலை வேம்படிச் சந்தியில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் இருவர் படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக 15

# யாழில் வீடு புகுந்து மூவர் மீது வாள்வெட்டு
## மோட்டார் சைக்கிளும் தீக்கிரை



(யாழ்ப்பாணம்)

வீட்டுக்குள் புகுந்த வாள் வெட்டுக் கும்பல் ஒன்று வீட்டில் மூவரை வாளால் வெட்டியதுடன் அங்கு 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பாஷண உத்வாசமும் சபிண்டீகரண அழைப்பும்



கடந்த 14.02.2024 புதன்கிழமை அமரத்துவம் அடைந்த
எமது குடும்பத்தலைவர்

## வேலாயுதக் குருக்கள் இராமலிங்கக் குருக்கள்

(சங்கரத்தை ஐயா)

அவர்களின் பாஷன உத்வாசம் நாளை (24.02.2024) சனிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெறுவதுடன் மதியம் சபிண்டீகரண கிரியைகளும் தொடர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தங்களை அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

முருகன் கோவிலடி,
சங்கரத்தை வட்டுக்கோட்டை.

(C-8397)

077 809 6445

இங்ஙனம் -
குடும்பத்தினர்

# வீடு விற்பனைக்கு

வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தில் வீடு மற்றும் கடை விற்பனைக்கு உண்டு. வாங்குபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :

**077 710 9016**

(19212)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

# வேலையாட்கள் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் யாட் ஒன்றிற்கு
கொங்கிறீட் கல் அரியும் வேலையாள்,
வேலித் தூண் அரியும் வேலையாள் தேவை.
தகுதியுடையோர் தொடர்பு கொள்ளவும்.

☎-077 940 0963

(C-8401)

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் திருநெல்வேலி தனங்காவில் பிள்ளையார் கோவில் அருகாமையில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- குடியிருப்பு சூழவுள்ள பகுதி.
- தரகர் தேவையில்லை.
- 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

தொடர்புகளுக்கு :

**071 173 3911**
**076 853 5022**

(19234)

# மரண அறிவித்தல்



தோற்றம்
23 - 07 - 2000

மறைவு
21 - 02 - 2024

## கேதீஸ்வரன் சகீந்தன்

சோதிவேம்படி மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கேதீஸ்வரன் சகீந்தன் அவர்கள் நேற்று முன்தினம் (21.02.2024) புதன்கிழமை அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் தம்பிமுத்து கேதீஸ்வரன் - கவிதாரஞ்சிதம் தம்பதியரின் அன்பு மகனும் சதுர்சனா (LB Finance, Manipay), சதுர்சன், சதுர்சிகா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.02.2024) வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சோதிவேம்படி,
மானிப்பாய்.

(19235)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



தோற்றம்
23 - 04 - 1954

மறைவு
22 - 02 - 2024

## நடராசா கலைவாணி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் சண்டில் வீதி கரவெட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா கலைவாணி அவர்கள் நேற்று (22.02.2024) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் - கனகரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கனகர் - நடராசா (R.M.O) அவர்களின் அன்பு மனைவியும் அன்பரசன் (கடற்றொழில் கூட்டுத்தாபன முகாமையாளர் - யாழ்ப்பாணம்), அன்புமதி, காலஞ்சென்ற அன்பழகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் வடிவேலு செந்தூரன் (ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாண கல்வி வலயம்) அன்பரசன் ஜெனிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், தெல்லிப்பளை) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஸ்ரீசங்கவி, ஸ்ரீசாம்பவி, ஆதிரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.02.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 724 1026

(C-8400)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 400 ரயில் கடவைகளுக்கு பாதுகாப்பு வேலிகள்

## ரயில்வே திணைக்களம் தீர்மானம்

(கொழும்பு)

400 ரயில் கடவைகளில் பாதுகாப்பு வேலிகளை அமைக்க ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதற்காக 1200 பணியாளர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக ரயில்வே பொதுமுகாமையாளர் எச்.எம்.டபிள்யூ பண்டார தெரிவித்துள்ளார்.

அரசின் பல்நோக்கு திட்டத்தின் கீழ் பணியில் அமர்த்தப்பட்டவர்களை இந்த கடமைகளில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.


நிதி அமைச்சுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த ஆட்சேர்ப்பிற்கு இணக்கம் காணப்பட்டதாக ரயில்வே பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# வரி அதிகரிப்பால் மூடப்படும் வெதுப்பகங்கள்

## இதுவரை ஆயிரம் வெதுப்பகங்கள் மூடப்பட்டதாக வெதுப்பக உரிமையாளர் சங்கம் தகவல்

(கொழும்பு)

**அதிகரிக்கப்பட்டுள்ள மின்சார கட்டணம், நீர்க்கட்டணம் மற்றும் வற் எனப்படும் பெறுமதி சேர் வரி காரணமாக நாடளாவிய ரீதியில் உள்ள ஆயிரத்துக்கும் அதிகமான வெதுப்பக உற்பத்தி நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளது.**



வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்தன இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலை அதிகரித்துள்ளமை, முட்டை விலை அதிகரிப்பு மற்றும் வெதுப்பக உற்பத்தி பொருட்களை கொள்வனவு செய்வதில் இருந்து அதிகளவான நுகர்வோர்கள் விலகியுள்ளனர்.

இதன் காரணமாக வெதுப்பக உற்பத்தி தொழிற்துறை பின்னடைவைச் சந்தித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# பதவி விலகினார் மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர்



(கொழும்பு)

இலங்கை மின்சார சபையின் பேச்சாளர் நோயல் பிரியந்த தமது பதவியில் இருந்து விலகியுள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில், பிள்ளைகள் தேவைப்பட்டால் எண்ணெய் விளக்குகளைப் பயன்படுத்தி படிக்க வேண்டும் என்று நோயல் பிரியந்த கூறியமை சர்ச்சையை ஏற்படுத்தியது.

தமது கருத்துக்களுக்கு சமூக ஊடகங்களில் கடுமையான விமர்சனங்கள் வெளியிடப்பட்டமையை அடுத்து அவர் பதவி விலகியுள்ளார்.

அதேநேரம் இந்த கருத்துக்காக அமைச்சு மற்றும் இலங்கை மின்சாரசபை ஆகிய இரு தரப்புக்காகவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர மன்னிப்பை கோரியுள்ளார். (நி-5-6)

# ஜனாதிபதித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டால் ரணிலை விரட்டியடிப்போம்-ஜே.வி.பி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திப்போடுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்தால் அதற்கு ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம் என்றும் அப்படிச் செய்தால் மக்களுடன் வீதிக்கு இறங்கி ஜனாதிபதி ரணிலை ஓட ஓட விரட்டியடிப்போம் என்றும் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடுப்பகுதியில் இப்போதுள்ள ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிகின்றது.

இந்நிலையில் அரசமைப்பின்படி அதற்கு முன்னதாகவே ஜனாதிபதித் தேர்தலை நடத்தி ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டும்.

அந்தத் தேர்தலை ஒத்திப் போடுவதற்கோ அல்லது வேறு ஏதும் சதி செய்வதற்கோ இடம் கொடுக்கமாட்டோம்.

மக்களை வீதிக்கு இறக்கி இந்த அரசை விரட்டுவோம் எனவும் தெரிவித்தார். (நி-5-6)

# மரண அறிவித்தல்

மலர்வு 13 - 06 - 1965

உதிர்வு 14 - 02 - 2024



## திரு. கந்தையா சந்திரசேகர்

(பாஸ்ரர்(PASTOR) சந்துரு)

யாழ்ப்பாணம் பாரதிலேன், கச்சேரியடியை பிறப்பிடமாகக் கொண்டவரும் மட்டக்களப்பு, பெத்தேல் திருச்சபையில் திருப்பணியைச் செய்து வந்தவருமான கந்தையா சந்திரசேகர் கடந்த 14.02.2024 அன்று அகால மரணமாகக் கர்த்தருக்குள் நித்திரையானார்.

அன்னார் கந்தையா இராசமணி தம்பதியரின் புதல்வனும் சிஸ்ரர் ஸ்ரெலா அவர்களின் பாசமிகு கணவரும், திருமதி கலாதேவி பஞ்சாட்சரம் (ஜேர்மன்), அமரர்.கருணாவதி(சாந்தி) செல்வநாதன், திரு.கந்தையா இராஜசேகர்( V.K.S - சவூதி அரேபியா),Dr.கந்தையா உதயசேகர் (நிகன் வைத்தியசாலை- இமையாணன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் திரு.வேலுப்பிள்ளை பஞ்சாட்சரம் (ஜேர்மன்),திரு.சுந்தரம் செல்வநாதன் (ஓய்வு நிலை கிராம அலுவலர்), திருமதி.இராஜசேகர் பபிதா, திருமதி. உதயசேகர் கலாராணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை 17.02.2024 சனிக்கிழமை அன்று பிற்பகல் 3.00 மணியளவில் பெத்தேல் திருச்சபை, இல: 55, கோவிந்தன் வீதி, மட்டக்களப்பில் நடைபெற்று ஆலையடிச்சோலை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டதென்பதை உற்றார், உறவினர், நண்பர்கள், அச் சபையினைச் சார்ந்தோர் அனைவருக்கும் மிகவும் துக்கத்தோடு அறியத்தருகின்றோம்.

(சி-8394)

தகவல்- குடும்பத்தினர்.

# ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு இலவச உணவு வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

ஆரம்பப்பிரிவில் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் அடுத்த மாதம் முதல் இலவச உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் அதிகளவான சிறுவர்கள் ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை அண்மையில் வலியுறுத்தியிருந்த நிலையிலேயே அரசினால் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய தரம் 1 முதல் 5 வரை கல்வி பயிலும் 17 இலட்சம் மாணவர்களுக்கு இலவச உணவு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# இளம் வயதினரிடையே வாய்ப்புற்றுநோய் அதிகரிப்பு

(கொழும்பு)

இளம் வயதினரிடையே வாய்ப்புற்றுநோயின் தாக்கம் அதிகரித்துள்ளதாக சத்திர சிகிச்சை வைத்தியர் தனுஜா தக்ஷிலி பத்திராஜா தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த காலங்களில் நாட்டில் வாய் புற்றுநோயின் தாக்கம் அதிகரித்துள்ளது.

குறிப்பாக இளம் வயதினரிடையே வாய் புற்றுநோயின் தாக்கம் வெகுவாக அதிகரித்துள்ளது.

இதேவேளை பெண்களுக்கு கர்ப்பப்பையில் ஏற்படும் வாய்ப்புற்றுநோயின் தாக்கம் ஓரளவு குறைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விக்ரம்-ராஜன்-கங்கு ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம்



கிறாஸ் கொப்பர்ஸ்


ஜொலிஸ்ரார்


கே.சி.சி.சி



யூனியன்ஸ்

விக்ரம்-ராஜன்-கங்கு ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண 30 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்டப்போட்டி தொடரில் 6 அணிகள் கலந்து கொண்டு விளையாடவுள்ளன.

இந் நிலையில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள 3 ஆவது போட்டியில் ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து யூனியன்ஸ் அணி மோதவுள்ளது.

அதே வேளை பிற்பகல் 1 மணிக்கு குறித்த மைதானத்தில் இடம்பெறவுள்ள பிறிதொரு போட்டியில் கிறாஸ் கொப்பர்ஸ் அணியை எதிர்த்து கே.சி.சி.சி அணி மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5-6)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 16 . 03 . 1957

மறைவு 25 . 01 . 2024

சோபகிருது ஆண்டு 25.01.2024 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் செல்லையா சிறீதரன்**

**(பிரபல கட்டிட கலைஞர்)**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 24.02.2024 சனிக்கிழமை காலை 5.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தங்களை அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

'விமலவாசா'
கரவெட்டி தெற்கு,
கரவெட்டி.

இங்ஙனம்:
குடும்பத்தினர்
077 328 9499

(19237)


# உரும்பிராயில் அழுகிய நிலையில் வயோதிப மாது சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கு பகுதியில் தனிமையில் வாசித்து வந்த வயோதிப மாது ஒருவர் நேற்று வியாழக்கிழமை காலை அழுகிய நிலையை சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்துரை ஜெகதீஸ்வரி (வயது- 66) என்ற வயோதிபமாது ஆவார்.

திருமணமாகாத அவர் தனிமையில் வசித்து வந்த நிலையில் அவருக்கு வெளித் தொடர்பு எதுவும் அற்ற நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிந்த ஒருவர் வீட்டுக்கு சென்ற போது துர்நாற்றம் வீசிய நிலையில் மதிலால் ஏறி உள்ளே சென்ற போது அவர் அழுகிய நிலையில் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்த கோப்பாய் பொலிஸார், யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மற்றும் சட்ட வைத்திய அதிகாரி பிரணவன் ஆகியோர் நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். சடலம் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7,60)

# கொக்குத்தொடு...

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணி தொடர்பான வழக்கு முல்லைத்தீவு நீதிமன்ற நீதவான் தர்மலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அத்துடன் ஏற்கனவே அகழ்ந்து எடுக்கப்பட்ட எச்சங்களில் இருந்து பிறிதாக எடுக்கப்பட்ட அனைத்து பிற பொருட்கள் தொடர்பாகவும் பேராசிரியர் ராஜ் சோமதேவவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணிகளின் மூன்றாம் கட்ட பணிகளை திட்டமிட்ட வகையில் முன்னெடுப்பதற்கு இன்னும் நிதி கிடைக்கப்பெறவில்லை எனவும் நேற்று மன்றில் அறிவிக்கப்பட்டுள்ளது.

சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதவான் தர்மலிங்கம் பிரதீபன், வழக்கின் விசாரணைகளை எதிர்வரும் மார்ச் மாதம் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழியின் முதல் கட்ட அகழ்வானது கடந்த வருடம் செப்டம்பர் மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ச்சியாக 11 நாட்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், 17 எலும் புக்கூட்டு தொகுதிகள் மீட்கப்பட்டிருந்தன.


மீண்டும் அகழ்வின் இரண்டாம் கட்ட பணிகள் கடந்த வருடம் நவம்பர் மாதம் 11ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக 9 நாட்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் 40 எலும்புக்கூட்டு தொகுதிகள் மீட்கப்பட்டதுடன் இரண்டாம் கட்ட அகழ்வுபணி இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இந்தநிலையில் மூன்றாம் கட்ட அகழ்வுகள் பணிகள் மார்ச் மாதம் 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் அதற்கான நிதி இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை எனவும் இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நீதி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் மூலம் அறியப்படுத்தியுள்ளதாகவும் நேற்று மன்றுரைக்கப்பட்டுள்ளது. (ம-7,33,299,315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டைக்காடு கடற்பகுதியில் கரை ஒதுங்கிய கூடாரம்



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கட்டைக்காடு கடற்பகுதியில் இரும்பாலான கூம்பு வடிவ கூடாரம் ஒன்று நேற்று காலை கரையொதுங்கியுள்ளது.

மீன்பிடிப்பதற்காக கடலுக்கு சென்ற மீனவர்கள் இதனை அவதானித்ததையடுத்து உடனடியாக வெற்றிலைக்கேணி கடற்படையினருக்கு அறிவித்திருந்தனர்.

குறித்த கூடாரத்தினை மீனவர்கள் கரைக்கு கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டபோதும் பயனளிக்கவில்லை.

இதையடுத்து அங்கு வருகை தந்த வெற்றிலைக்கேணி கடற்படையினர் கூடாரத்தினை அப்புறப்படுத்தினர். (நி-5-6)



உ
சிவமயம்

## வண்ணை வைத்தீஸ்வரன் பரிவார வேம்படி அருள்மிகு பிள்ளையார் இரதோற்சவம் -23.02.2024



**பிடி அதன் உரு உமை கொள மிகு கரியது**
**வடி கொடு தனது அடி வழிபடும் அவர் இடர்**
**கடி கணபதிவர அருளினன் மிகு கொடை**
**வடிவினர் பயில்வலி வலம் உறை இறையே!**

பிடி-பெண்யானை, கரி, களிறு- ஆண்யானை, சிவபெருமானே முழுமுதற்கடவுள் ஈதலாகிய கருணையே தன் வடிவமாகியவள் உலகெலாம் ஈன்ற அன்னையாகிய உமையவள் பெண்யானை யின் உருவம் ஏற்க நம் சிவன் ஆண் யானையது வடிவம் ஏற்றுச் சிவனடியார்களாகிய எம் துன்பங்களைக் களைதற் பொருட்டுக் கணபதி என்னும் மூத்த பிள்ளையைத் தோற்றுவித்து அருளினான். பிரணவ ஒலியின், தும்பிக்கையோடு கூடிய கண பதியின் ஓங்காரத் தோற்றம்.ஒலியின் வேகத்தை விட ஒளியின் வேகம் பன்னூறாயிரம் மடங்கு மிகுதி, எனவே விந்துவாகிய ஒளி விரைந்து சுழித்து வெளிப்பட நாதமாகிய ஒலி நீள்கோடாக அதைத் தொடர்கிறது.

அங்கனம் வட்டத்தை தாங்குகின்ற நேர்கோடு **"உ"** எனவும் ஓங்காரத் தோற்றம் **"ஓ"** எனவும் நம் தமிழ் மொழியின் நெடுங்கணக்கில் வரி வடிவம் பெற்று **"பிள்ளையார்சுழி"** எனும் பெருமைமிகு குறியீடாக கணபதிக்கு உரியன ஆயின.

ஆணவ இருளை நீக்கி ஆன்மாக்களுக்கு ஒளிமயமான வாழ்வளிக்கவே இறைவனால் அருளுருவாகத் தோற்றம் பெற்றவர் **கடைத்தெரு வேம்படி அருள்மிகு வேம்படிப்பிள்ளையார்.**

இத்தகு மிக நுண்ணிய மெய்ப்பொருட் கருத்துக்களை இப் பாடலில் ஞான சம்பந்தப் பெருமான் அறிவுறுத்துகிறார்.**இஃது நாம் பெற்ற பேறு.**

**"ஓம் மகா கணேபதியே நம"**

திருவிழா நாட்கள் இரவு வண்ணை வைத்தீஸ்வரன் அம்மை அம்பனை, விக்கினேஸ்வரக் குருக்கள் (சங்கர்) மந்திரம் பொழிய, பூக்கள் மழையாகப் பொழிய, நாதஸ்வர வித்துவான் கார்த்தீபன், தவில் விற்பனர்கள் காண மழை பொழிய ஓதுவார் திருமுறைகள் ஓதி வாழ்த்த அருள்மிகு வேம்படிப் பிள்ளையார் அலங்காரப் பொழிவுடன் வந்து ஆலய முன்றலில் காளாஞ்சி வாங்கி எம்பெருமானிடம் ஆசீர்வாதம் பெறும் காட்சி அன்று **கையிலையம் பதியில் பழம் பெற்ற காட்சியாக அமை வதைப் பார்க்க நமக்கு அந்த நான்முகன் ஆயிரம் கண்கள் படைத்தனிலேயே எனத் தோன்றும்.**

ஆலயத்தில் விழாக்களின் உண்மைப் பொருளை உணர்ந்து ஆசார சீலராக நிவேதனப்பொருட்களுடன் சென்று ஆசாரியாரைக் குருவாக எண்ணி அவர் செய்யும் **தம்ப,விம்ப,கும்ப, பூசைகளை தரிசித்தல் வேண்டும்.**

இவ்வாறு வழிபடுவோர் சரியை, கிரியை, யோகம் முதலாகிய பதங்களில் நின்றோர் பக்தியினவாகத் திருவருள் பதியப் பெற்றுச் **சிவஞானமடைவர்**

**"ஓம் நமசிவாய"**

சேக்கிழார் பெரிய புராணத்தில் ஈசனைக்கண்டு தரிசிக்கும் கண்களின் சிறப்பை

**மண்ணினிற் பிற ந்தர் பெறும் பயன்....**
**கண்ணினாலவர் நல் விழப்பொலிவு**
**கண்டார்தல்...**
**எனத் திருப் புராணத்தில் காணலாம்** (சி-8392)

"ஓம் நமசிவாய"

உலக வாழ்வில் துன்பம் உண்டாகும் போதும் உள்ளம் தளராத **இறைவனையே போற்றுதல் வேண்டும்.**

உள்ளத்தில் உண்மை உண்டானால் வாக்கினில் **ஒளி** உண்டாகும். ஆலய கோபுரம் இடது பக்கம் பிள்ளையாரைத் தரிசித்து பூமாலை, பூக்கள் சாத்தியும் சிவ சிவ என நீர் வார்த்து பாமாலை (வாடாதமாலை பாமாலை) பாடியும் வண ங்குவோம்.

உலகத்தவர்க்கு உதவும் அருளுடையவனை எண்ணுவதும், கைத்தலங்கள் கூப்புவதும் எம்பெருமானுடைய பாதங்களை பணிவதும் அடைவதும் நல்ல வர்களது கடனாகும் ஓம் மகா கணபதியே நம".

**விநாயகப்பெருமானை மனமொழி மெய் வாக்குகளால் சிந்தித்து; தினம் திருமுறைகள்,**
**விநாயகர் அகவல் ஓதி வாழ்த்தி**
**வந்திருப்பார்களது தீவினைகள்**
**நீங்கும் எல்லா நலம் பெறலாம்**



க.கு.க சிவபாலன்
காரைநகர் ஈழத்துச்சிதம்பரம்
திருத்திண்ணபுரம்
மாணிக்கவாசகர்
மடாலயம் பாதுகாவலர்
ஓம் நமசிவாய

# இராசிபலன்

23.02.2024
மாசி 11, வெள்ளிக்கிழமை
சதுர்த்தசி பிற்பகல் 4.44 மணிவரை
ஆயிலியம் முன்னிரவு 8.29 மணிவரை

சுபநேரம் -6.36-8.00 மணிவரை
இராகுகாலம்-11.00-12.30 மணிவரை
நடேசர் அபிசேகம்

சந்திராஷ்டமம்
மூலம், பூராடம்.

வளவன்




வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.




இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.




தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.




பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், வழிபாட்டால் இனிமை சேரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.




சகோதர வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், விடாமுயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், போசன சுகமுண்டு.




எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, சயன சுகக் குறைவான நாள்.




வழிபாட்டால் பெருமைகாண வேண்டிய நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெற புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.




கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கலாம்,தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள்.




கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், ஆன்மீக சிந்தனை மெலோங்கும் நாள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.




ஒளிமயமான எதிர்காலத்திற்கு உறுதுணை புரியும் நாள், குடும்பத்தில் கல கலப்பான சூழ்நிலை உருவாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.




பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது.




நீண்ட நாட்களாக திட்டமிட்டிருந்த காரியம் இன்று கைகூடும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும் நாள்.

விவாதம் அருமையானது வாக்குவாதம் வெறுமையானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி-வடக்கு காணி விஸ்தரிப்பு; அறிக்கைகோரும் ஜனாதிபதி செயலகம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம்-வடக்கில் விடுவிக்கப்பட்ட காணிகளில் யாழ். சர்வதேச விமான நிலையத்துக்கென 500 ஏக்கரை மீள அளவீடு செய்வது தொடர்பாக பணிகளின் அறிக்கைகளை அனுப்பி வைக்குமாறு ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவால் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் ருவன் சந்திரவுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்புக்கென மக்கள் மீள குடியேறியுள்ள வலி வடக்கு பிர தேசத்தின்குரும்பசிட்டி ஜே/242, கட்டுவன் ஜே/238, கட்டுவன் மேற்கு ஜே/239, குப்பிளான் வடக்கு ஜே/211, மயிலிட்டி தெற்குஜே/240 ஆகிய கிராமங்களில் காணி அளவீடுகள் இடம்பெறுவதாக மக்கள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், அது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்கு யாழ்.கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் எழுத்து மூலம் தெரியப்படுத்தியிருந்தார்.

இதனையடுத்து குறித்த காணி அளவீடுகள் தொடர்பான விரிவான அறிக்கையை எதிர்வரும் மார்ச் 5 ஆம் திகதிக்கு முன்பாக ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டும் என ஜனாதிபதி செயலகத்தினால் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6-30-33)

# தற்காலிக வீதித்தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொட்டடி சனசமூக நிலைய பவளவிழா நிகழ்வானது நாளை சனிக்கிழமை சனசமூக முன்றலில் நடைபெறவுள்ளதால், அன்றைய தினம் 3.00 மணி தொடக்கம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1.00 மணிவரை சீனிவாசகம் வீதியில் வீசித்தடை மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ்வீதியை பாவனைக்குட்படுத்தும் கனரகவாகனங்கள், பாராவூர்திகள் மற்றும் இதரவாகனங்கள் இவ்வீதிக்குள் உள்நுழைவதும் வெளிச் செல்வதும் தடை செய்யப்பட்டுள்ளது.

எனினும் குறித்த வீதியூடாக பொதுமக்களுக்கு இடையூறு இல்லாதவகையில் வாகனங்கள் பயணிக்கமுடியும் என யாழ்மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (நி-5-6)

# காருக்குள் கஞ்சா ஒருவர் கைது

(சாவகச்சேரி)



கிளிநொச்சிப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி காருக்குள் கஞ்சாவை மறைத்து எடுத்து வந்த 33 வயதான நபர் ஒருவர் நேற்று வியாழக்கிழமை சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவ புலனாய்வுப் பிரிவு வழங்கிய தகவலுக்கு அமைவாக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையை அண்மித்து மேற்படி கைது நடவடிக்கையைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது காருக்குள் இருந்து 25கிராம் கஞ்சா மீட்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-5-6-30)

# வன்முறை சம்பவங்களுடன் தொடர்புடையவர் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் இடம்பெற்ற வன்முறைசம்பவங்களுடன்தொடர்புடைய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த நபர் ஒருவர் தமிழகத்தில் தலைமறைவாகி இருந்து மீண்டும் யாழ்திரும்பிய வேளை நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.





சந்தேகநபர் சென்னையில் இருந்து யாழ் சர்வதேசவிமான நிலையம் ஊடாக யாழிற்கு திரும்புவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், விமான நிலைய வளாகத்தில் காத்திருந்த பொலிஸார் குறித்த சந்தேக நபரை கைது செய்துள்ள துடன்சந்தேக நபரை பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6-33)

# கசிப்புடன் கைதான நபருக்கு தண்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆனைக்கோட்டை பகுதியில் ஷவைத்து ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்புடன் பெண்ணொருவரை மானிப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணை விசாரணைகளுக்கு பின்னர் பொலிஸார் நேற்றுமுன்தினம் புதன் கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய வேளை மன்றில் பெண் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து 25 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது. (நி-5-6-33)



இலங்கை சாரணர் சங்கத்தின் 10ஆவது ஜம்போரி மாநாடு திருகோணமலையில் நேற்று முன்தினம் ஆரம்பமான நிலையில் இம்மாநாட்டில் யாழ். மாவட்டத்திலிருந்து 11 பாடசாலைகளை பிரதிநிதித்துவப்படுத்தி 253 சாரணர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

(படம்: சிவசாந்தன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 300 | 200 | 350 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 150 | 150 | 120 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 600 | 700 | 600 |
| தக்காளி | 600 | 700 | 600 | 700 | 550 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 140 | 200 | 120 |
| கோவா | 400 | 420 | 500 | 500 | 350 |
| கரட் | 600 | 550 | 600 | 600 | 500 |
| பூசணி | 200 | 280 | 250 | 300 | 180 |
| புடோல் | 200 | 150 | 200 | 200 | 120 |
| வாழைக்காய் | 200 | 250 | 200 | 250 | 180 |
| சின்ன வெங்காயம் | 200 | 300 | 300 | 300 | 280 |
| பெரிய வெங்காயம் | 360 | 450 | 400 | 400 | 300-380 |
| பாகற்காய் | 350 | 400 | 400 | 500 | 400 |
| வெண்டக்காய் | 400 | 300 | 250 | 500 | 280 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 150 | 140 |
| பயற்றங்காய் | 200 | 250 | 250 | 350 | 350 |
| லீக்ஸ் | 350 | 400 | 400 | 500 | 400 |
| பீற்றூட் | 300 | 400 | 350 | 400 | 400 |
| கறிமிளகாய் | 600 | 700 | 500 | 700 | 700 |
| முருங்கைக்காய் | 1400 | 1400 | 1300 | 1200 | 1200 |
| போஞ்சி | 350 | 350 | 450 | 600 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 280 | 180 | --- |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 60 | 100 | 200 |
| தேசிக்காய் | 150 | 300 | 200 | 200 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 100 | 70-100 | 50-100 |
| இராசவள்ளி | 320 | 400 | 350 | 500 | 350 |
| வெங்காயப்பூ | 180 | 150 | 200 | 300 | 120 |
| முள்ளங்கி | 100 | 100 | 180 | 200 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 80 | 80 | 80 |
| வல்லாரை | 60 | 50 | 50 | 80 | 50 |
| [illegible]பலா | 100 | 100 | 120 | 200 | 100 |

# இந்திய இழுவைமடி படகுகளால் ரூ.30லட்சம் பெறுமதியான வலைகள் அறுப்பு

## வெற்றிலைக்கேணியில் சம்பவம்

(கரணவாய்)

வடமராட்சிகிழக்கு வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் நேற்று பத்திற்கும் மேற்பட்ட இந்திய இழுவைமடி படகுகள் 4 மீனவர்களுக்கு சொந்தமான 30 இலட்சம் பெறுமதியான வலைகளை அறுத்து இழுத்துச் சென்றுள்ளனர். சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வெற்றிலைக்கேணியில் இருந்து மீன்பிடிக்க சென்ற நான்கு படகுகள் தங்களது மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போது கரைக்கு அண்மையாக வந்த இந்தியன் இழுவைமடி படகுகள் அவர்களுடைய பெறுமதியான வலைகளை அறுத்து இழுத்துச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் கரைக்கு திரும்பிய மீனவர்கள் வெற்றிலைக்கேணி கடற்றொழிலாளர் சங்கத்தினரிடம் சம்பவம் குறித்து முறையிட்டனர். (நி-5-6-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லவராயன்கட்டு - வலைப்பாடு வீதிபுனரமைப்பை துரிதப்படுத்துங்கள்

## ஆளுநருக்கு சிறீதரன் எம்.பி கடிதம்

(அக்கராயன்)

பல்லவராயன்கட்டு தொடக்கம் வலைப்பாடு வரையான வீதியினை புனரமைக்க நடவடிக்கை எடுக்கக்கோரி பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வட மாகாண ஆளுநருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி உள்ளார்.

கடந்த 12 ஆம் திகதி திங்கட்கிழமை அனுப்பி வைக்கப்பட்ட அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள பல்லவராயன் கட்டு சந்தியில் இருந்து கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு வரையிலான 11 கிலோ மீற்றர் நீளமான பல்லவராயன்கட்டு வலைப்பாடு வரையான வீதி இற்றைக்கு 100 வருடங்களுக்கு மேலாக எந்தவிதமான புனரமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்படாது மிக மோசமாக சேதமடைந்த நிலையில் உள்ளது.

மாவட்டத்தின் ஆதி கிராமங்களான கிராஞ்சி, பொன்னாவெளி ஆகிய இரு பெரும் கிராம சேவையாளர் பிரிவுகளில் கிராஞ்சி கிழக்கு, கிராஞ்சி மேற்கு, பிருந்தாவனம், மொட்டையன் குளம், சிவபுரம், மதனிகுடியிருப்பு, வேரவில், வலைப்பாடு, பொன்னாவெளி, பாலாவி உள்ளிட்ட உப கிராமங்களான பொருளாதாரத்தில் நலிவடைந்த நிலையில் உள்ள 1,230 குடும்பங்களைச் சேர்ந்த 4,523 பேர் அடிப்படைத்தேவைகளை கூட பெற முடியாத அவல நிலையில் வாழ்ந்து வரும் இந்த பகுதி மக்களின் அத்தியாவசிய தேவையாக உள்ளதும் பயன்படுத்த முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளதுமான பல்லவராயன்கட்டு பாலாவி வீதி ஐ வீதி திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டிருந்த போதிலும் இன்றளவும் புனரமைக்கப்படவில்லை.

இவ்வீதியின் தற்போதைய மிக மோசமான நிலையால் அவசர மருத்துவ தேவைப்பாடுகளின் நிமித்தம் நோயாளர் காவு வண்டிகள் கூட பயணம் செய்ய முடியாத அவல நிலை காணப்படுகின்றது. உரிய நேரத்திற்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்க முடியாததால் அண்மை நாட்களில் இரு பரிதாபகரமான மரணங்கள் சம்பவித்துள்ளன.



போரால் முழுமையாக பாதிக்கப்பட்டு மீளக் குடியேறி 16 வருடங்களை கடந்தும் பிரதான போக்குவரத்து பாதையினை புனரமைக்கும் வழியற்று அந்த ரிக்கும் மேற்குறித்த கிராம மக்கள், மாணவர்கள், உத்தியோகத்தர்கள், கடற்றொழிலாளர்கள், முதியவர்கள், நோயாளர்கள், கர்ப்பிணி தாய்மார்களினதும் நெருக்கடி நிலைமையினை கரிசனை கொண்டு அனுகி கடந்த 6 மாத காலமாக தடைப்பட்டுள்ள நோயாளர் காவு வண்டியின் பயன்பாட்டின் அவசியத்தினை கருதியேனும் குறித்த வீதியினை துரிதமாக புனரமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. (நி-5-6-350)

# மதுபோதையில் சாரத்தியம் ரூ.40,000 தண்டம் விதிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சியில் மதுபோதையில் வாகனம் செலுத்தி விபத்தினை ஏற்படுத்தியவருக்கு நாற்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதோடு சாரதி அனுமதிப்பத்திரம் ஆறு மாத காலத்திற்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மதுபோதையில் வாகனத்தை செலுத்தி விபத்தினை ஏற்படுத்தியவரை பொலிஸார் கைது செய்ததோடு நபருக்கு எதிராக வழக்கு பதிவு செய்து கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில் குறித்த குற்றச்சாட்டுக்களுக்கு நாற்பதாயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் அவரது சாரதி அனுமதிப்பத்திரம் ஆறுமாத காலத்துக்கு இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. (நி-5-6-315)

# தீக்கிரையான விற்பனை நிலையம்

(நெளுக்குளம்)

வள்ளிபுனம் பகுதியில் லொட்டரி விற்பனை நிலையம் ஒன்று தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.

குறித்த விற்பனை நிலையத்திற் குள் கதிரை, மேசை ஒன்றும் 120 லொத்தர் ரிக்கட்டுக்களும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் பல்வேறு கோணங்களில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6-299)




# தேக்கங்காட்டில் பாலம் புனரமைப்பு பயணிகள் அவதானம்




(நெளுக்குளம்)

தேராவில் குளத்து நீரினை தேக்கங்காட்டுபகுதிஊடாகவெளியேற்றுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான ஏ-35 வீதியில் பாலத்தினை அமைப்பதற்கான முதற்கட்டப் பணிகள் கடந்த செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகியுள்ளது.

முல்லைத்தீவு பரந்தன் வீதியில் தேராவில் தேக்கங் காட்டு வளைவு வீதியில் பாலம் அமைப்பதற்கான பணியில் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்கள் ஈடுபட்டு வருவதால் அவ்வீதியால் பயணிக்கும் சாரதிகள் வாகனத்தின் வேகத்தினை குறைத்து பயணிப்பதன் ஊடாக விபத்துக்களை ஏற்படுவதை தவிர்த்துக்கொள்ள முடியும். (நி-5-6-299)

# பொது அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

1972 ஆம் இலக்க 17.06.2016 ஆம் திகதிய வர்த்தமானி பிரசுரத்திலுள்ள எமது சபைக்குச் சொந்தமான, கந்தரோடை J/200 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள கீழ்காட்டப்படும் வீதியினை பெயர்மாற்றம் செய்யுமாறு அப்பகுதி மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் எமது சபையை கோரியுள்ளனர். விபரங்கள் வருமாறு

| | |
|---|---|
| தற்போதைய பெயர் | :- கல்லூரி ஒழுங்கை, வீதி இலக்கம் NJVSE 298 , நீளம் 500 மீற்றர். |
| மாற்றப்படவுள்ள பெயர் | :- லயன் மகாதேவா வீதி |
| வீதியின் ஆரம்பம் | :- சுன்னாகம் புத்தூர் வீதி |
| வீதியின் முடிவு | :- பிள்ளையார் கோவில் வீதி |

எனவே இவ்வீதி பெயர்மாற்றத்திற்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின் எதிர்வரும் 07.03.2024 ஆம் திகதிக்குள் எழுத்துமூலம் செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**சாரதா உருத்திரசம்பவன்,**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.**

22.02.2024




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# 'சலோ' போராட்டத்

# கண்ணீர் புகைக்குண்டு

- விவசாயி ஒருவர் உயிரிழப்பு
- மேலுமொரு விவசாயி தீக்குளிப்பு
- பரபரப்பான போராட்டக்களம்
- இரு நாட்களுக்கு ஒத்திவைக்கப்ப

(டில்லி)

**டில்லியில் விவசாயிகளால் முன்னெடுக்கப்பட்ட 'சலோ' போராட்டத்தின் போது பொலிஸார் வீசிய கண்ணீர் புகைக்குண்டால் விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் உத்தர பிரதேச மாநில விவசாயி ஒருவர் தீக்குளித்தமையால் போராட்டக்களம் பரபரப்பாக காணப்பட்டது. இதனால் இப்போராட்டம் இரு நாட்களுக்கு ஒத்திவைக்கப்பட்டதாக விவசாயிகள் சங்கம் அறிவித்துள்ளது.**





அனைத்து பயிர்களுக்கும் குறைந்தபட்ச ஆதார விலை. தரப்படுவதை சட்டபூர்வமாக்கவேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளுடன் கடந்த 13 ஆம் திகதி முதல் டில்லியை முற்றுகையிடும் போராட்டத்தில் பஞ்சாப், ஹரியானா, உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த 200இற்கும் மேற்பட்ட விவசாயச் சங்கங்களைச் சேர்ந்த விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

பஞ்சாப் - ஹரியானா எல்லையான கனோரியில் தடுப்புகளை நோக்கி விவசாயிகள் முன்னேறி வந்தநிலையில் பல முறை கண்ணீர் புகைக்குண்டு

# இந்தியா - கிரீஸ் இடையேயான வர்த்தக தொடர்பை உயர்த்த முடிவு

## இரு நாட்டு பிரதமர்களின் சந்திப்பிற்கு பின் தீர்மானம்



(டில்லி)

இந்தியா - கிரீஸ் இடையே 2030 இற்குள் வர்த்தகத்தை இரு மடங்காக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு 4 நாள் அரசுமுறை பயணமாக கிரீஸ் பிரதமர் மிட்சோடாகிஸ் கடந்த திங்கட்கிழமை டில்லிக்கு சென்றிருந்தார். கிரீஸ் பிரதமருக்கு குடியரசுத் தலைவர் மாளிகையில் நேற்று பாரம்பரிய முறைப்படி வரவேற்பும் இராணுவ மரியாதையும் அளிக்கப்பட்டது.

பிரதமர் நரேந்திர மோடியும் கிரீஸ் பிரதமர் கிரியாகோஸ் மிட்சோடாகிசும் டில்லியில் கடந்த செவ்வாய்க்கிழமை இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினர். இரு நாடுகளும் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பது குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

பேச்சுவார்த்தைக்குப் பின்னர், பிரதமர் மோடி தெரிவிக்கையில் "இரு தரப்பு வர்த்தகத்தை 2030 ஆம் ஆண்டுக்குள் இரு மடங்காக உயர்த்த ஒப்புக் கொள்ளப்பட்டது. விவசாயம், மருந்து, மருத்துவ சாதனங்கள், தொழில்நுட்பங்கள், கண்டுபிடிப்புகள், திறன் போன்ற புதிய வாய்ப்புகள், வளர்ச்சி மற்றும் கணனி தொழில்நுட்பம் ஆகியவற்றில் ஒத்துழைப்பு குறித்து ஆலோசிக்கப்பட்டது".

கிரீஸ் பிரதமர் தெரிவிக்கையில், "அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்திருப்பது பெருமையும் மகிழ்ச்சியும் அளிக்கிறது. இந்தியா - கிரீஸ் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்தப் பயணம் உதவும். கிரீஸ் நாட்டைப் பொறுத்தவரை இந்தியாவுடனான கூட்டு செயற்பாடு முக்கியத்துவம் வாய்ந்தது எனத் தெரிவித்தார். (ஙி-5-6)

# உக்ரைனின் ஏ
# 60 ரஷ்ய வீ



(மொஸ்கோ)

உக்ரைனின் ஏவுகணைத் தாக்குதல் காரணமாக 60இற்கும் மேற்பட்ட ரஷ்ய படையினர் கொல்லப்பட்டுள்ளதாக சர்வதேச ஊட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

ந்தில்

வீச்சு

கப்பட்ட போராட்டம்

களை பொலிஸார் வீசினர். இதில் பஞ்சாப் மாநிலம் பதின்டாவை சேர்ந்த 21 வயதான விவசாயி உப்கரண் சிங் உயிரிழந்துள்ளதாக விவசாயிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.


அத்துடன் உத்தர பிரதேச மாநில விவசாயி ஒருவரும் போராட்டத்திற்கு நடுவே தனக்குத்தானே தீ வைத்துக் கொண்டுள்ளார். சக போராட்டக்காரர்களால் தீ அணைக்கப்பட்டு விவசாயி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விவசாயிகள், பொலிஸார் இடையே நடந்த மோதலில் பொலிஸார் 12 பேரும், விவசாயிகள் பலரும் காயமடைந்தனர். இதனிடையே டில்லியை முற்றுகையிடும் பேரணி 2 நாட்களுக்கு ஒத்திவைக்கப்படுவதாக விவசாய சங்கங்களின் தலைவர்களில் ஒருவரான சர்வான் சிங் சந்தேர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே போராட்ட களத்தில் பொலிஸார் நடத்திய தாக்குதலில் விவசாயி உயிரிழந்துள்ளது வேதனை அளிப்பதாக காங்கிரஸ் மூத்ததலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தனது டுவிட்டரில் "கடந்த முறை போராட்டத்தின்போது 700 விவசாயிகள் உயிர்த்தியாகம் செய்தபிறகுதான் மோடி அரசு, விவசாயிகள் கோரிக்கையை ஏற்றது. விவசாயிகள் மரணத்திற்கு பாஜக அரசு ஒருநாள் பதில் சொல்லியே ஆக வேண்டும்" என கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். (நி-5-6)

## ஏவுகணைத் தாக்குதலில் வீரர்கள் உயிரிழப்பு



காங்கள் தெரிவித்துள்ளன.

டொனெட்ஸ்க் பிராந்தியத்தில் உள்ள பயிற்சித்தளமொன்றில் முக்கிய அதிகாரியின் வருகைக்காக படையினர் தயார் நிலையிலிருந்த வேளை உக்ரைன்ஏவுகணை தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான தாக்குதலொன்று இடம்பெற்றதை ஏற்றுக்கொண்டுள்ள ரஷ்ய அதிகாரியொருவர், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மிகைப்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

சைபீரியாவை தளமாக கொண்ட படையணியின் படையினர் ட்ருடொவ்ஸ்கே கிராமத்திற்கு அருகில் உள்ள பயிற்சி தளத்தில் தளபதியொருவரின் வருகைக்காக திறந்தவெளியில் காத்திருந்தவேளை உக்ரைனின் ஏவுகணைகள் அவர்களை தாக்கியுள்ளன. (நி-5-6)

## விண்வெளியில் அணு ஆயுதங்களை நிலைநிறுத்தும் எண்ணம் எமக்கு இல்லை

### அமெரிக்காவின் குற்றச்சாட்டை மறுத்த ரஷ்யா

(மொஸ்கோ)

விண்வெளியில் அணு ஆயுதங்களை நிலைநிறுத்தும் எண்ணம் எங்களுக்கு இல்லை என்று அனைத்து சர்ச்சைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் ரஷ்யாவின் நிலைப்பாட்டை ஜனாதிபதி புடின் தெரிவித்துள்ளார்.



அண்மையில் ரஷ்யா விண்வெளிக்கு அனுப்புவதற்கான அணு ஆயுதம் ஒன்றை உருவாக்கி வருவதாக வெள்ளை மாளிகை வட்டாரம் உறுதியாக நம்புவதாக செய்தி வெளியாகி அனைவரையும் பீதியில் ஆழ்த்தியிருந்தது.


மேலும் அந்த அணுவாயுதம் விண்வெளியிலுள்ள செயற்கைக்கோள்களை அழிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அமெரிக்கா ரஷ்யா மீது குற்றம் சுமத்தியது.

விண்வெளியில் அணு ஆயுதம் உட்பட பேரழிவு ஏற்படுத்தக்கூடிய எந்த விதமான ஆயுதங்களையும் நிலைநிறுத்தக்கூடாது என்ற ஒப்பந்தம் நடைமுறையில் உள்ளதாகவும் இந்த ஒப்பந்தத்தில் ரஷ்யா உட்பட 130 இற்கும் அதிகமான நாடுகள் கையெழுத்திட்டுள்ளதாகவும் அமெரிக்கா தெரிவித்தது.

அந்த ஒப்பந்தத்தினை மீறி, விண்வெளி திட்டங்களுக்கு அபாயத்தை ஏற்படுத்தும் வகையில் ரஷ்யா செயற்பட்டு வருவதாகவும், அமெரிக்கா ரஷ்யா மீது குற்றங்களை அடுக்கி வருகிறது.

இந்நிலையில் அமெரிக்காவின் குற்றச்சாட்டை பகிரங்கமாக ரஷ்யா மறுத்துள்ளது. இது தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி புடின் கூறுகையில் இந்த விவகாரத்தில் எங்கள் நிலைப்பாடு தெளிவானது. வெளிப்படையானது விண்வெளியில் அணு ஆயுதங்களை நிலைநிறுத்தும் எண்ணம் எங்களுக்கு இல்லை என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## அமேசானில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய அனகோண்டா பாம்பு



(வோஷிங்டன்)

அமேசான் காடுகளில் இருந்து புதியவகை பச்சை அனகோண்டாவை விஞ்ஞானிகள் குழு கண்டு பிடித்துள்ளது. உலகின் மிகப் பெரிய பாம்பு என்று நம்பப்படும் அனகோண்டாவின் வீடியோவை வோங்க் தனது இன்ஸ்டாகிராமில் பகிர்ந்துள்ளார். இந்த பாம்பு கார் டயரைப் போல் தடித்ததாகவும் எட்டு மீற்றர் நீளமும் 200 கிலோவுக்கு மேல் எடையும் கொண்டதாகக் கூறப்படுகிறது.

புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட இந்த வகை பாம்பு "வடக்கு பச்சை அனகோண்டா" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## செயலிழந்த செயற்கைக்கோள் பூமியில் விழும் அபாயத்தில்

(மொஸ்கோ)

செயலிழந்த செயற்கைக்கோள் பூமியில் விழும் அபாயம் உள்ளதாக ஐரோப்பா விணவெளி நிறுவனம் அச்சம் தெரிவித்துள்ளது.

"Grandfather" எனும் செயற்கைகோளை 1995 ஆம் ஆண்டு ஐரோப்பா விண்வெளி ஆய்வு நிறுவனம் விண்ணில் செலுத்தியது.

ஓசோன் படலத்தை கண்காணிப்பதற்காக அனுப்பப்பட்ட இந்த செயற்கைகோள் ஆயுட்காலம் முடிவடைந்து தன்னுடைய சுற்றுப்பாதையை விட்டு விலகியது.

இந்த நிலையில் "Grandfather" செயற்கைகோளின் உடைந்த பாகங்கள் பூமியின் மீது விழும் அபாயம் உள்ளதாக ஐரோப்பா விண்வெளி நிறுவன விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து விஞ்ஞானிகள் தெரிவிக்கையில், "செயற்கைக் கோளை கட்டுப்படுத்த முடியாத காரணத்தினால் எங்கு விழும் என கூற முடியவில்லை. இருப்பினும் ஐரோப்பாவில் உள்ள கடல்களில் விழவைக்க முயற்சிகள் நடக்கின்றன.

இதன்பெருமளவிலான பாகங்கள் எரிந்து சாம்பலாகிவிடும். ஆனால், சில பாகங்கள் வளிமண்டலத்தை தாண்டி பூமியில் விழும் வாய்ப்பு இருக்கிறது. என அச்சம் தெரிவித்துள்ளனர்.

இம்மாத இறுதிக்குள் Grandfather செயற்கை கோள் பூமியில் விழலாம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதான மீனவர்கள் 18 பேர் விடுதலை

(கரணவாய்)

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 18 பேரை விடுதலை செய்து படகோட்டி ஒருவருக்கு ஆறுமாத சாதாரண சிறைத்தண்டனை விதித்து ஊர்காவற்றுறை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 8 ஆம் திகதி எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இரு படகையும் அதில் இருந்த 19 இந்திய மீனவர்களையும் கடற்படையினர் கைது செய்திருந்த நிலையில் இவ்வழக்கு நேற்று வியாழக்கிழமை ஊற்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

யாழ். மாவட்ட நீரியல்வளத்துறை அதிகாரிகளால் 19 மீனவர்களும் முற்படுத்தப்பட்டு குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதில் ஒரு படகில் படகின் உரிமையாளர் குற்றம் இடம்பெற்ற வேளை படகில் இருந்தமையினால் படகினை அரசுடமையாக்க நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன் இரண்டாவது படகின் படகோட்டி ஜி.பி.எஸ். கருவியை கையாண்டும் எல்லையைத் தாண்டி இலங்கை கடற்பரப்பினுள் சட்ட விரோதமாக உட்பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபட்டமையினால் படகோட்டிக்கு ஆறு மாத கால சாதாரண சிறைத் தண்டனை விதித்து உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை ஏனைய 18 மீனவர்களுக்கும் 18 மாத சாதாரண சிறைத் தண்டனை விதித்து அதனை ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைத்து நிபந்தனை அடிப்படையில் விடுதலை செய்ய மன்று உத்தரவிட்டது. (நி-5-6-60)


# டுபாயில் இலங்கையர்கள் 13 பேர் கைது

(கொழும்பு)

டுபாயில் இலங்கையர்கள் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பொலிஸாரால் தேடப்பட்டு வந்த 13 முக்கிய குற்றவாளிகளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வாறு கைது செய்யப் பட்டவர்களில் பெலியத்தவில் ஐந்து பேர் படுகொலை செய்யப்பட்ட



சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கூறப்படும் உர கஹா மைக்கல் என்பவரும் அடங்கு கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)


## சாவகச்சேரி நகராட்சி மன்றம் வர்த்தக விளம்பர ஒலிபரப்பு சேவைக்கான கேள்வி அறிவித்தல் - 2024

தலைவர், பெறுகைக் குழு, சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் பின்வரும் சேவைக்கு 01.03.2024 தொடக்கம் 31.12.2024 வரையான காலப்பகுதிக்கு முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் பொருத்தமான கேள்விதாரரிடமிருந்து கோரப்படுகின்றது.

**பெறுகையின் பெயர், இல**

1. வர்த்தக விளம்பர ஒலிபரப்பு சேவைக்கான கேள்விதாரர்களை தெரிவு செய்தல் NP/14/41(3)/Broad casting service/2024

**நிபந்தனைகள்**

1. வர்த்தக விளம்பர ஒலிபரப்பு சேவைக்கான வியாபாரப்பதிவு செய்திருப்பதுடன் வியாபார உரிமம் பெற்றிருத்தல் வேண்டும். வர்த்தக விளம்பர சேவைக்கான அமைவிடம் நகரசபையால் தீர்மானிக்கப்படும்.
2. ஒலியின் அளவை தேவைக்கேற்ற வகையில் அளவாக பேணல் வேண்டும்.
3. நகராட்சி மன்ற கட்டுப்பாடுகள் மற்றும் குத்தகை ஒப்பந்தத்தினை மீறும் நடவடிக்கையில் ஈடுபடுமிடத்து வர்த்தக விளம்பர ஒலிபரப்பு சேவையானது நகர சபையின் கட்டளைச்சட்டத்திற்கு அமைவாக இரத்து செய்யப்படும்.
4. சனி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாட்களிலும் கிழமை நாட்களில் பிற்பகல் 5.00 மணிக்கு பின்னரும் விளம்பர சேவையினை மேற்கொள்ள முடியும்.
5. ஆரம்ப கேள்வித் தொகை ரூபா 100,000.00 ஆகும். தெரிவு செய்யப்படுபவர் மீளளிக்கக்கூடிய வைப்பாக ரூ 25,000.00 செலுத்த வேண்டும்.
6. நீதிமன்றம், பாடசாலை, கோயில், தேவாலயம் என்பனவற்றுக்கும் பொதுமக்களுக்கும் மற்றும் வர்த்தக நிலையங்களிற்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையில் ஒலிபரப்புச் சேவையினை மேற்கொள்ள முடியாது.

**செயலாளர்,**
**நகராட்சி மன்றம்,**
**சாவகச்சேரி.**

(C-8395) 2024.02.24


# இன்று ஒரு தகவல் 45



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## உளம் சார்ந்த உடற்கோளாறுகள்

தாஜ்மகாலை விலைக்கு வாங்கலாம் என்று பார்க்கிறேன் என்றார் ஒருத்தர்! நான் அதை விற்பதாக இல்லை என்றார் இன்னொருத்தர்!

தன்னை பற்றி உயர்வான நம்பிக்கை வைத்திருப்பது அவசியம் தான். அதற்காக அது இந்த அளவுக்கு போய்விட்டது என்றால் பார்ப்பவர்கள் சந்தேகப்பட ஆரம்பித்து விடுவார்கள். நம்மால் எல்லாம் முடியும் என்று நினையுங்கள் என்று சொன்னா! அதற்காக தாஜ்மகாலை விலைக்கு வாங்கவா நினைக்கிறது. மனவலிமை என்பது வேறு.

வியாதிகளை எல்லாம் விரட்டுவதற்கு மருந்து மட்டும் போதாது மன வலிமையும் வேணும். இப்படி சொன்னா நான் ஏதோ சம்பந்தம் இல்லாத இரண்டு விடயத்திற்கு முடிச்சு போடுற மாதிரி நினைப்பீங்க. நடந்த கதையை கேளுங்க அப்ப தான் நம்புவீங்க.

"ஸ்டீபன் ஜே குல் டு" என்று ஒரு அறிஞர். அவருக்கு வயிற்றில் ஒரு புற்றுநோய். மருத்துவர்கள் அவர் உயிர் பிழைப்பது ரொம்ப கஷ்டம். ஏனென்றால் இதுமாதிரி நோயுள்ளவர்கள் 90 சதவீதம் ஒரு ஐந்து, ஆறு மாதத்திற்குள் இறந்து விடுவார்கள் என்று சொல்லி விட்டார்கள்.

ஆனா அந்த அறிஞர் என்ன சொன்னார் தெரியுமா? நான் ஏன் அந்த 90 சதவீத்தில் ஒருத்தராக இருக்க வேண்டும்! பத்து சதவீதத்தில் ஒருத்தராகதான் நான் இருப்பேன் என்று உறுதியாக சொன்னார்! அந்த மனவலிமை அவரை காப்பாற்றி விடுகிறது.

இன்னொரு இடத்திலே ஒரு ஆய்வு நடத்தினார்கள். ஓரே மாதிரியான புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களை இரண்டு பிரிவாக பிரித்தார்கள்.

ஒரு பிரிவுக்கு புற்றுநோய்க்கான மருந்து கொடுத்தாங்க, தீவிரமான சிகிச்சை கொடுத்தாங்க இருந்தாலும் அவர்களுக்கு ஒரு அவநம்பிக் கையை உண்டாக்கிகொண்டு வந்தாங்க! "உயிர் பிழைப்பது கஷ்டம்" என்கின்ற மாதிரி.

இன்னொரு பிரிவுக்கு புற்றுநோய் மருந்து என்று சொல்லி சிலதை கொடுத்தாங்க. ஆனால் அது எல்லாம் மருந்தே கிடையாது! அது அந்த நோயாளிகளுக்கு தெரியாது.புற்று நோய்க்கான மருந்து என்று எண்ணிக்கொண்டு அதை சாப்பிட்டு வந்தார்கள்.ஆனால் அவர்களிடம் உங்கள் உடம்பு வேகமாக குணமாகி கொண்டு வருகிறது.மருந்து எல்லாம் வேகமாக வேலை செய்கிறது. சீக்கிரமாகவே உங்களுக்கு குணமாகிவிடும் என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள்.கொஞ்சநாள் கழித்துப்பார்த்தால் இந்தப்பிரிவிலேதான் நோய் சீக்கிரமாக குணமடைவது தெரிஞ்சுதாம். இதுலே இருந்து என்ன தெரிகிறது ?

மருத்துவ சிகிச்சையிலே மனதோட பங்கு எவ்வளவு இருக்கிறது என்பது இதிலே தெரிகிறதா? இல்லையா? மனம் சம்பந்தப்பட்ட உடல் கோளாறுகளுக்கு என்று சொல்லி புதுசா ஒரு தனிப்பிரிவே உண்டாகி இருக்கிறது. psychosomatics, இந்த பிரிவிலே எந்தெந்த நோய் எல்லாம் இருக்கிறது தெரியுமா? வயிற்றுப்புண், அரிப்பு, தோலிலே ஏற்படும் தடிப்பு, படபடப்பு, ஒரு பக்கதலைவலி, சில வகை பெருங்குடல் அழற்சி நோய், ஆஸ்துமா இது மாதிரியான நோய்களுக்கும் மனதிற்கும் சம்பந்தம் இருக்கு. மனதோட தன்மையை பொறுத்தும் நோயாளி தனக்குள்ள வியாதியைப்பற்றி கொண்டு இருக்கிற மனப்பான்மை பற்றியும் வியாதியோட தன்மை மாறுபடுகிறது.

துயரம் அழுகையை வர வைக்கணும்! இல்லை என்றால் வேறு நோய்கள் வந்துவிடும் என்று சொல்கிறார் "மாட்ஸ்லே" என்ற உளவியல் அறிஞர்.சிலவகையான முதுகுவலி வருவதற்கும் போவதற்கும் மனதுதான் காரணம் என்று சொல்கிறார் "ஜான் சார்னோ" என்னும் அமெரிக்க நிபுணர்.

ஒருத்தருக்கு ஆஸ்துமா. ரோஜாப்பூவை முகரும் போது எல்லாம் இந்த ஆஸ்துமா அதிகமாகிறது என்கிறார். அதற்கு ஒரு டாக்டர் ரோஜாப்பூ மாதிரி ஒரு காகித பூவை எடுத்து அவரிடம் முகர சொன்னார். அப்போதும் அவருக்கு ஆஸ்துமா அதிகமாக வந்தது!

அவரை உளப்பகுப்பாய்வு செய்தார்கள். அப்போது உண்மை தெரிய வந்தது. அந்த நோயாளி ரோஜாவுக்கும் தனது உயிருக்கு உயிராக நினைக்கின்ற தாயின் சமாதிக்கும் நினைவுத் தொடர்பை ஏற்படுத்தி விட்டு உணர்ச்சி வசப்பட்டு அவதிப்படுகிறார் என்பதனையும் கண்டு பிடித்தார்.

ஒரு நோய் வந்தால் அது முந்தின ஜென்மபாவம் அதை தான் இப்போது அனுபவிக்கின்றேன் என்று சொல்லிகொண்டு கஷ்டப்படாதீர்கள்! நேற்றைக்கு, இன்றைக்கு பரவாயில்லை நான் குணம் அடைந்து கொண்டு வருகிறேன் என்று சொல்லி கொண்டு வாருங்கள். இந்த கருத்தோற்றம் நல்ல பலனை கொடுக்கும்.நல்லெண்ணம், தன்னம்பிக்கை, வாழ்க்கையிலே ஒரு பிடிப்பு, குறிக்கோள்,அன்பு, துணிவு, தன்வலி அறிவது இவை எல்லாம் மனது நம க்கு கொடுக்கும் மாமருந்துகள் என்று நிபுணர்கள் சொல்கிறார்கள்.

நம்பிக்கையில்லாமல் டாக்டரிடம் போனால் நோய் எப்படி குணமாகும்! ஒருத்தர் அப்படி தான் டாக்டரின் வீட்டு வாசல் மட்டும் போய்விட்டு திரும்பி வந்து விட்டார்! ஏன் என்று விசாரித்தால்.எனக்கு டாக்டர் மேல் நம்பிக்கை இருக்கிறது.

**ஆனால் எனக்கு அந்த டாக்டர் பெயரை போர்ட்டுல பாரத்ததும் எனக்கு என் மேல் நம்பிக்கை இல்லாமல் போய் விட்டது. அது தான் திரும்ப ஓடி வந்து விட்டேன் என்று சொன்னார்.அப்படி என்ன தான் எழுதி இருந்தது என்று பார்த்தால், கைலாசம் என்று எழுதி இருந்தது!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூச்சொரியும் பொற்கரங்கள்



முனைவர் ச.மனோன்மணி
முன்னாள் இல்லத்திட்டப் பணிப்பாளர்,
சைவச் சிறுவர் இல்லம்,
சைவ அபிவிருத்திச் சங்கம்

இன்று உலகம் எங்கும் பரவலாகப் பேசப்படும் பொருள் சிறுவர் நலக் காப்பாகும். பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் அன்புக்காக ஏங்கி அலைந்து திரிகிறார்கள். பெற்றோரை இழந்தும் பிரிந்தும் தனியாகி நிற்கிறார்கள். ஏதும் அறியாத இளம் பிஞ்சுகள். அடைக்கலம் தேடி. வீதிகளிலே விழியில் நீர் வழிய நடந்து செல்கிறார்கள். இயற்கை நிலையிலும் செயற்கை நிலையிலும் இவர்களுடைய வாழ்வுச் சூழல் திடீரென மாற்றம் பெற்றதால், செய்வது அறியாமல் திகைத்து நிற்கிறார்கள். தமது எதிர்காலம் பற்றிய வழிநடத்தல் கிடையாமல் விலங்குகளைப் போல உணவையும் உறையுளையும் தேடித் தவிக்கிறார்கள். காலத்தின் வேகமான சூறைக் காற்றுச் சுழற்சியிலே சிக்குண்டு செல்லும் திக்குத் தெரியாமல், மிரண்ட பார்வையுடன் சந்தியிலே நிற்கும் பிஞ்சுக் கரங்களைப் பற்றி அன்புடன் அரவணைத்து அழைத்துச் செல்லும் பண்பான உள்ளங்கள் இன்று ஒருங்கிணைய வேண்டும். அதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளன.

குடும்பம் என்ற சமூகக் கட்டமைப்பு நிலையில் குழந்தை ஒரு முக்கிய இணைப்பாகக் கருதப்படுகிறது. ஆனால் இன்று. இந்நிலை மாற்றம் பெற்று வருகிறது. ஆணும் பெண்ணும் மனமொத்து ஒன்றாக ஓரிடத்தில் நிலையாக வாழும் போது குழந்தை அவர்களின் இணைப்பு பாலமாக விளங்கியது. கூட்டு வாழ்க்கையின் குதூகலத்தை உணர்த்தியது.

வாழ்வியலின் வளர்ச்சிப் படிகளை விளக்கியது. பெற்றோர் என்ற தகுதிப் பாட்டை ஆணும் பெண்ணும் பெற வழி வகுத்தது. ஆனால் மனமொத்த குடும்ப அமைப்பிலே விரிசல் ஏற்பட்டபோது குழந்தையின் நிலையான புகலிடம் தொலைந்தது. பெற்றோர் ஒருவரையொருவர் பிரிய நேர்ந்தபோது குழந்தையின் நிலை இருதலைக் கொள்ளி எறும்பாயிற்று. தாய், தந்தை என்ற ஒன்றிணைந்த உறவின் பலம் அற்றுப்போக குழந்தை ஆதரவற்றுப் போனது. மேலும் பிரிந்த தாயும் தந்தையும் மறுமணம் என்னும் புதிய உறவில் இணைந்தபோது குழந்தை குடும்ப அமைப்பில் இருந்து தூக்கி வீசப்பட்டு வீதியிலே விழுந்தது.

வாழும் சூழலிலே மாறுதல்கள் திடீரெனத் தோன்றிய போது குடும்பக் கட்டுக்கோப்பு அறுந்தது. இயற்கையான செவ்நெறியிலே இடர்பாடுகள் ஏற்பட்ட போது குழந்தை இழப்புகள் பலவற்றைச் சந்திக்க நேர்ந்தது. பெற்றோரையும் உறவினரையும் இழந்து இடம்பெயர்ந்து வாழும் நிலைக்கு ஆளானது. அன்பான அரவணைப்பையும் ஆறுதலையும் இழந்து திக்கற்ற காட்டில் வாழும் வாழ்க்கையில் தன்னை இணைத்துக்கொள்ள நேர்ந்தது.

உலகத்திலே பல்லாயிரம் சிறுவர்கள் கொடிய போர் என்னும் செயற்றைச் சூறாவளியால் தாக்குண்டு தனித்து நிற்கிறார்கள். அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு ஏற்றவற்றைத் திட்டமிட வேண்டிய பாரிய பணி எமக்கு உண்டு. அவரவர் வாழும் மண்ணிலே திக்கற்றுப் போன சிறாரின் நல் வாழ்வுக்காக அல்லும் பகலும் அயராது உழைக்க வேண்டியுள்ளது. மேலை நாடு கீழை நாடு என்ற சூழல் வேறுபாடின்றி எதிர்காலத்திற்காக உருவாக்கப்பட வேண்டிய நல்ல மனிதர்கள் என்ற எண்ணத்தோடு செயற்பட வேண்டியுள்ளது. இன்று பல சிறுவர் நலக் காப்பகங்கள் உலகெங்கும் செயற்பட்டு வருகின்றன. எனினும் அவற்றின் செயற்பாடு மேலும் விரிவாக்கம் பெற வேண்டியுள்ளது. குறிப்பாக இடம் பெயர்ந்து புலம்பெயர்ந்து வாழும் வாழ்வியலில் இப் பணியின் முனைப்புப் பெரிதும் வேண்டப்படுகின்றது.

இடப் பெயர்வு நிலையில் சிறுவரின் உளநிலை பெரிதும் துன்பத்திற்கு ஆளாவதை எல்லோரும் கருத்தூன்றி நோக்குவதில்லை. எனவே சிறுவரின் உள்ளம் உணர்ந்து செயற்பட வேண்டும்.

ஆதரவற்ற சிறுவர் உள்ளம் எப்போதும் அலை பாய்ந்து கொண்டிருக்கும். ஓரிடத்தில் நிலைகொள்ளாது. அதன் வெளிப்பாடு சிறுவர் நடத்தையில் தெரியும். எதையோ எதிர்பார்த்து கண்கள் சோகத்திரை விரித்து நிற்கும். அதில் தேடல் என்னும் குறிப்பு எழுதப்பட்டிருக்கும். எதிர்கொள்ளும் ஒவ்வொரு முகத்திலும் எதையோ தேடி நிற்கும் உணர்வு புலப்படும். அந்த உணர்வின் நிழலைக் கண்டு இணையும் அன்புள்ளம் தோன்றும் வரை அந்தச் சிறாரின் உள்ளம் அமைதியடையாது. விழி மலராது. முகம் மகிழ்வை உணர்த்தாது. வாய் உரை பேசாது. ஊமையாகி ஒளியிழந்து திரியும் அந்தச் சின்ன முகத்தில் 'தேடல்' மட்டுமே தெரியும். எனவே அத்தகைய கொடியிலிருந்து அறுந்து விழுந்த மொட்டுக்களைப் பேணி மலரவைத்து மணம் பரப்பச் செய்ய ஏற்ற இல்லங்கள் அமைய வேண்டும்.

சிறார்களுக்கென இல்லம் அமைப்பது எளிமையான பணியன்று. வயது நிலை. கல்வி நிலை. சூழல் நிலை என்பவற்றிற்கு ஏற்ப இல்லம் அமைவது இன்றியமையாதது. இடம்பெயர்ந்து, பெற்றோரைப் பிரிந்து வாழ நேர்ந்த சிறுவர்களுக்கு வாழ்க்கையில் ஏற்பட்ட தனிமை உணர்வை முதலில் போக்க வேண்டும். அதற்கென ஆவண செய்யும் வகையில் தொழிற்பட வேண்டும். இருளிலே நிற்பது போலப் பயப்படும் சிறுவரை ஏற்றபடி வழி நடத்தப் பயிற்சிகள் தரவேண்டும். சிறுவர் இழந்து நிற்கும் பெற்றோரின் அன்பு, பரிவு, நட்பு, தோழமை என்பவற்றை முடிந்தவரை பெற்றுத்தர நம்பிக்கையூட்ட வேண்டும். பல்வேறு இழப்புகளின் தாக்கத்தால் இறுகிப் போன பிஞ்சு உள்ளங்களை இளக வைக்கப் பல முயற்சிகளை மேற்கொள்ளலாம். சிறுவர் உள்ளம் கள்ளமற்றது. பேச்சு நிலையில் சிறுவர்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசமாட்டார்கள். எனவே பெரியவர்கள் சிறுவர்களோடு பேசும்போது மிகவும் கவனமாகப் பேச வேண்டும். தன்மீது அன்பு செலுத்துபவரைச் சிறுவர் எளிதில் இனம் கண்டு கொள்வர். இதைவிட 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என ஒரு முது மொழியும் உண்டு. சிறுவர் உளநலம் கெடாத வகையில் முதலில் எம்மீது நம்பிக்கை உண்டாகும் வகையில் நாம் செயற்பட வேண்டும். தனது அன்புக்குரிய பெற்றோரை இழந்து நிற்கும் நிலையில் தன்மீது அக்கறை கொண்டவர்களை மதிக்கும் பண்புடமை சிறாரை வந்தடைய இது வழிவகுக்கும். உள்ளத்திலே உறைந்து விட்ட சோகத்தை துடைக்கவும் இந்த அன்புடைமைதான் வழி காட்டும்.

வயது நிலையிலே சிறாரின் வாழ்வுச் சூழல் திடீரென மாறுபடும் போது அவர்கள் சிறார் இல்லங்களிலே அடைக்கலம் தேடி வருவதற்கு முன்னர், வீதிகளிலே அலையும் நிலையில் சீரழிந்து போகும் தன்மையும் உண்டு. எனவே வீதியிலே தனியாக அலையும் சிறாரை உடனடியாக இல்லங்களிலே சேர்ப்பிக்க வேண்டும். அதன் மூலம் சிறுவர் துர்நடத்தை, சிறுவர் துஷ்பிரயோகம் என்பவற்றைத் தடைசெய்ய முடியும். வழி காட்டுதல் நிலையில் பெற்றோரைவிட இல்லங்கள் ஒரு ஒழுங்கு நிலையில் செயற்பட முடியும். காலம், இடம் அறிந்து பழகும் பயிற்சியை இல்லத்து வாழ்க்கை எளிதாகக் கற்றுக் கொடுக்கும்.

குறுகிய மனோபாவம் இன்றி விரிந்த மனநிலையில் எல்லோருடனும் இயல்பாகப் பழக வாய்ப்புப் பெற்ற சிறாராக அவர்கள் உருவாக இல்லம் வழிசமைத்துக் கொடுக்கும். தன்னைப் போல பிறரும் துயரங்களைத் தாங்கி நிற்பதைச் சிறார்கள் நேரடியாகக் காணும்போது மனம் கனிந்து மற்றவர்களுக்கு உதவும் பண்புடையவராய் மாறிவிடுவர். இந்த மாற்றம் அவர்களைத் தனிமைத்துயரில் இருந்து மீட்டுவிடும். பிறர்நலம் பேணும் பண்புடையவராய் மாற்றும். 'அன்பு ஈனும் ஆர்வம் உடைமை, அது ஈனும் நண்பெனும் நாடாச் சிறப்பு' என வள்ளுவர் கூறிய உள்ளத்தின் செயற்பாட்டு நிலையை இந்தச் சிறுவர்களும் அடைய சிறுவர் இல்ல வாழ்வியல் உதவும். இழப்புகளால் வெறுப்படைந்து வன்முறையால் தன்னை நிலைப்படுத்த நினைக்கும் சிறுவர்களைக் கைப்பற்றி அழைத்துச் சென்று வாழ்க்கைப் பாதையிலே சீராக நடந்து செல்லப் பயிற்சி அளிப்பது இன்றை மனிதர்களின் கடமையாகும்.

கல்வி நிலையிலே காலத்திற்கு ஏற்ற கல்விப் பயிற்சி பெறாத சிறுவர் இன்று பலர் உளர். குடும்ப வறுமையும் நோயும் குடிப்பழக்கமும் சிறுவர் கல்விப் பயிற்சியைத் தடை செய்கின்றன. ஏட்டுக் கல்வி மட்டுமின்றி பண்பாட்டுக் கல்வியையும் சிறார் இழந்து நிற்கின்றனர். பண்பாட்டுக் கூறுகளை இனம் கண்டு அவற்றைப் பயில சிறுவர் இல்லங்கள் வாய்ப்பளிக்கும். கூடி வாழ்வதால் ஏற்டும் நன்மைகளையும் மன நிறைவையும் சிறு வயதிலேயே அறிந்துகொள்ள முடியும். தன் உள்ளத்திலே சுமக்கும் துன்பத்தை தன் வயதை ஒத்தவருடன் பகிர்ந்து கொண்டு வாழப் பயிற்சியும் கிடைக்கும். தாயற்ற இரு சிறுவர்கள் ஓரிடத்திலே வாழும்போது ஒருவரையொருவர் எளிதில் உணர்ந்துகொள்வர்.

தமது நினைவுத் திரையில் நிழலாய் இருக்கும் தாயின் உருவத்தைப் பற்றி உரையாடி மகிழ ஒரு துணை கிடைக்கும் போது உள்ளத்திலே பரவசம் ஏற்படுகிறது. என்றோ ஒரு நாளைக்கு மீண்டும் போய் வாழுவோம் என்ற இலக்குடன் கண்ணில் நிறைத்து வைத்திருக்கும் தான் வாழ்ந்த வீட்டை அடிக்கடி நினைவுபடுத்திப் பார்க்கும் பயிற்சியை தனது புதிய நண்பனுக்கும் பயிற்றும் ஆற்றல் தான் பண்பாட்டுக் கல்வி தந்த பயனாகிறது.

சிறுவர் இல்லங்களில் அமைப்பு சூழலுடன் ஒத்தியைவதாக அமைய வேண்டும். சிறுவர் ஏற்கனவே பழகிய வீட்டு வாழ்க்கையிலிருந்து இல்லத்து வாழ்க்கைக்குத் தம்மை உடனடியாக இயைபுபடுத்திக் கொள்ள ஏற்றவகையில் இல்லங்கள் அமைய வேண்டும். பண்பாட்டு நிலையில் சில மரபுகளும் பேணப்பட வேண்டியனவே. சிறுவர்களிலும் ஆண், பெண் என்ற வேறுபாடு தெளிவுபடுத்தப்பட வேண்டியுள்ளது. எதிகாலத்துச் சமூகத்தை கட்டிக்காக்கும் மனிதர்கள் என்ற நிலையில் சிறுவரது வளர்ச்சி நிலையில் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும். மரபு நிலையால் சில நடைமுறைகள் பயிற்றப்பட வேண்டும். கீழைத்தேச மரபின் இறுக்கமான நடைமுறை இன்று சற்றுத் தளர்வுற்றிருப் பினும் பெருமளவு மாற்றம் ஏற்படவில்லை. பரந்த இடப்பரப்பிலே இல்லம் அமைவுறுவது நன்று.

அது சிறுவர் உள்ளத்திலே உள்ள குறுகிய எண்ணங்களை விரட்டி விடும். சூழலைச் சுத்தமானதாகவும் அழகாகவும் வைத்திருக்க, இடையறாத பயிற்சி அளிப்பதே சிறந்தது. தான் வாழும் சூழல் பலர் ஒத்துழைப்பால் பொலிவுடன் திகழ்கிறது என்ற சமூக நோக்கை இச் செயற்பாடு சிறுவர் நினைவில் பதிக்கும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற குறிக்கோளைச் சிறுவர் நாளாந்தம் உணரவும் இது வழிவகுக்கும். 'சூழல் பாதுகாப்பு' என்னும் செயற்பாட்டால் மனித வாழ்வியலில் ஏற்படும் நன்மையைச் சிறுவர் செயற்பாட்டு நிலையில் கற்க வாய்ப்புண்டாகும்.

மரங்களை நாட்டி வளர்ப்பதும் பேணுவதும் சிறார் உடலுக்கும் உள்ளத்திற்கும் நலம் தரும் அருமருந்துகளாகும். தன்னுடைய கவனிப்பினாலும் உடல் உழைப்பினாலும் மரஞ்செடி, கொடிகள் வளர்ந்து பசுமையும் வளமும் நல்கும் போது சிறாருக்கு மனமகிழ்ச்சி கிடைக்கிறது. அவற்றின் விளைபொருட்கள் உணவாகப் பயன்படும் போது புதிய உற்சாகம் பிறக்கிறது. பகிர்ந்து உண்ணும் மனநிறைவு சிறாருக்கு உடல் நலம் தருவதாகும். கல்வி நிலையிலும் பயிர்ச் செய்கை பயனுள்ள முயற்சியாக எதிர்காலத்திற்கும் சிறந்த தொழில் வழிகாட்டியாகிறது. சிறுவர் மனம் பண்பட பயிர்ச் செய்கை பேருதவி செய்யும். இயற்கையின் துணையுடன் முளைத்து வளரும் செடியும் கொடியும் மரமும் வளர்ந்து காலத்துக்கேற்ற பயன்களைத் தருவதை நேரடி அனுபவம் மூலம் காணும் சிறுவர் உள்ளம் தமக்கும் இயற்கைத் துணை செய்யும் என்ற நம்பிக்கையை உள்வாங்கிக் கொள்ளும். பருவ மாற்றங்களையும் இயற்கையின் ஆற்றலையும் கணித்து தொழிற்படும் பட்டறிவைச் சிறுவர் பெறவும் இது வாய்ப்பளிக்கும். சிறுவர்களிக் எதிகாலத்தை அவர்களே திட்டமிடவும் இப் பட்டறிவு நிலை உதவும்.

எனவே சிறுவர் இல்லங்கள் பலர் கூடி இழுக்கும் பாரிய தேராக இன்று விளங்குகின்றன. உலகிலே வாழும் கருணை உள்ளங்கள் அனைத்தையும் இணைக்கும் பெருங்கடலாக அமைகின்றன. தான் வாழ்ந்த மண்ணை விட்டு வேற்றுப்புலம் சென்று வாழ்பவர்கள் அனைவரும் அயராத முயற்சியுடையவர்கள். அவர்களின் உழைப்பின் ஒரு சிறுதுளி இந்தச் சிறுவர் இல்லங்களின் பராமரிப்புக்காகச் சேரும் போது அது பெரு வெள்ளமாக கருணைக் கடலிலே கலக்கிறது. 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்' என நமது முன்னோரின் முது மொழியும் எம்மை வழிநடத்தும். பிறந்த மண்ணில் ஆதரவற்று நிற்கும் சிறுவர்களின் நல்வாழ்வுக்காக தன் உழைப்பின் ஒரு பங்கை உதவும் ஏழை பங்காளன் வாழ்த்தப்பட வேண்டியவன். தெய்வப் பணியிலே தன்னை இணைத்துக் கொண்டவன். கல்லுக்குள் ஈரம் கசிவது போல அவன் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் விண்ணவர் போலப் போற்றப்பட வேண்டியவன். அவனுடைய கொடைக்கரம் சிறுவர் இல்லங்களை நோக்கி நீளும்போது அது பொற்கரமாகப் பொலிவுடன் தோன்றுகிறது. அந்தக் கரங்களை அன்புடன் மானசீகமாகப் பற்றிக்கொள்ளும் சிறார்கள் கடவுளின் கருணை பெற்றவராவர்.

காலமும் தூரமும் வேறுபட்ட போதும் எதிர்காலச் சிறுவரின் நலம் காக்கும் பணியில் எல்லோரும் இணையச் சிறுவர் இல்லங்கள் துணை செய்யும். மனித விழுமியங்களைச் சிறுவர் அறியவும் எதிர்காலத்தில் சிறுவர் இக்கொடைப் பணியை மனமுவந்து செய்யவும் இல்லத்து வாழ்வியல் சிறந்ததொரு மரபுக்கையளிப்பகும். கடல் கடந்த நாடுகளில் புகலிடம் தேடிப் போன மனிதர்களின் உள்ளதிலே பதிந்த வடுக்கள் மறையவும் துன்பச் சுமைகள் குறையவும் இந்தக் கொடைப்பணி அருமருந்தாகும். கண்ணில் தோன்றாத சின்னஞ் சிறு உருவங்களின் மலர்ந்த முகங்களைக் கண்ணாரக் காண வேண்டும் என்ற மனித வாழ்வியலின் மரபு என்பதும் புரியும். சிறுவர் இல்லத்தில் வாழும் சிறாரின் கண்ணில் மின்னும் களிப்பு. மின்னல் போல வந்து கொடையாளரைத் தழுவ. இன்பச் சிலிர்ப்பில் இறைவன் தோற்றம் உணர்வில் வந்து படியும். இதுவே இறவாத இன்பமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர்

413



இருபுறமும் மரங்கள் அடர்ந்து இருள் சூழ்ந்திருந்த பாதையில் அவர்கள் வெகு தூரம் சென்ற பிறகு திடீரென்று நிலா வெளிச்சத்தில் ஒரு அதிசயமான காட்சியைக் கண்டார்கள். கரிய பெரிய யானைகள் பலவரிசையாக நின்று பிரமாண்டமான ஸ்தூபம் ஒன்றைக் காவல் புரிந்து கொண்டிருந்தன. அதைப் பார்த்ததும் வந்தியத்தேவனுடைய மூச்சு நின்றுவிடும் போலிருந்தது. அந்த மூதாட்டியோ சிறிது தயங்காமல் யானைக் கூட்டத்தை நோக்கி நடந்தாள். ஆழ்வார்க்கடியான், வந்தியத்தேவன் காதோடு "அந்த யானைச் சிலைகள் எவ்வளவு தத்ரூபமாக இருக்கின்றன பார்த்தாயா?" என்று சொன்ன பிறகுதான், வந்தியத்தேவனுடைய திகைப்பு நீங்கியது. ஆயினும் அவனுடைய வியப்பு நீங்கியபாடில்லை.

ஒன்றோடொன்று நெருக்கி இடித்துக்கொண்டு நின்று, அந்த மலை போன்ற ஸ்தூபத்தைத் தாங்கிக் கொண்டிருப்பது போல் அமைக்கப்பட்டிருந்த யானைச் சிலை ஒவ்வொன்றுக்கும் இரண்டு நீண்ட தந்தங்கள் இருந்தன. அவ்விதம் வரிசையாக நின்ற நூற்றுக்கணக்கான யானைகளில் ஒன்றேயொன்றுக்கு மட்டும் ஒரு தந்தம் ஒடிந்து போயிருந்தது. அந்த யானை அருகில் அவள் சென்றாள். அதன் காலடியில் கிடந்த பெரிய கருங்கல்லை அகற்றினாள். அகற்றிய இடத்தில் ஒரு படிக்கட்டு காணப்பட்டது. அதன் வழியாக அவள் இறங்கிச் செல்ல, மற்றவர்களும் பின் தொடர்ந்தார்கள். படிக்கட்டில் இறங்கிச் சிறிது தூரம் குறுகலான வழியில் சென்றதும் ஒரு மண்டபம் காணப்பட்டது. அதில் இரண்டு பெரிய அகல் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.

விளக்குகளில் ஒன்றைத் தூண்டிவிட்டு அந்த மூதாட்டி கையில் எடுத்துக் கொண்டாள். இளவரசரை மட்டும் தன்னுடன் வரும்படி சமிக்ஞையினால் தெரிவித்தாள். மற்ற இருவரும் இதைப்பற்றி முதலில் சிறிது கவலை கொண்டார்கள். ஆனால் அந்த மூதாட்டி விளக்கைத் தூக்கிப் பிடித்து அந்த மண்டபச் சுவர்களில் உள்ள சித்திரங்களைத்தான் இளவரசருக்குக் காட்டுகிறாள் என்று தெரிந்ததும் அவர்களுடைய கவலை ஓரளவு நீங்கியது.

இளவரசர் அம்மண்டபச் சுவரில் பார்த்த சித்திரங்கள் ஏதோ ஒரு கதையில் நிகழ்ந்த சம்பவங்களை வரிசைக் கிரமமாகக் கூறும் தொடர் சித்திரங்களாகத் தோன்றின. புத்த பகவானின் பூர்வ அவதாரக் கதைகளைப் புத்த விஹாரங்களில் சித்திரித்திருக்கும் முறைப்படி இச்சித்திரங்களும் அமைந்திருந்தன. ஆனால் இவை புத்தரின் அவதார நிகழ்ச்சிகளைக் குறிப்பிடவில்லை. ஒரு மானிடப் பெண்ணின் கதையையே சித்திரித்திருந்தது அந்தச் சித்திரப் பெண்ணின் முகத்தோற்றம் ஏறக்குறைய இப்போது விளக்குப் பிடித்துக் காட்டிய மூதாட்டியின் முகத்தை ஒத்திருந்தது. ஆகவே இந்த ஊமை ஸ்திரீ தன்னுடைய வரலாற்றையே சித்திரங்களாக எழுதியிருக்கிறாள் என்று இளவரசர் இலகுவாகத் தெரிந்து கொண்டார்.

அவற்றில் முதல் சித்திரம் கடல் சூழ்ந்த தீவில் ஓர் இளம் பெண் தன்னந்தனியாக நிற்பதையும் அவளுடைய தகப்பனார் கட்டுமரம் ஏறி மீன் பிடித்துக் கொண்டு வருவதையும் காட்டியது. பின்னர், அந்தப் பெண் காட்டு வழியே சென்றாள். ஒரு மரத்தின் கிளை மீது ஓர் இளைஞன் உட்கார்ந்திருந்தான். அவன் இராஜகுமாரனைப் போலிருந்தான். அந்த மரத்தின் மீது ஒரு கரடி ஏறிக் கொண்டிருந்தது. இராஜகுமாரன் அதைக் கவனியாமல் வேறு திசையில் பார்த்துக் கொண்டிருந்தான். அந்தப் பெண் கூச்சலிட்டுவிட்டு ஓடினாள்.


கரடி அப்பெண்ணைத் துரத்தியது. மரத்தின் மேலிருந்த இளைஞன் குதித்து வந்து கரடியின் மேல் வேலை எறிந்தான். கரடிக்கும் அவனுக்கும் துவந்த யுத்தம் நடந்தது. அந்தப் பெண் தென்னை மரம் ஒன்றின்மீது சாய்ந்து கொண்டு கரடிக்கும் இளைஞனுக்கும் நடந்த சண்டையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## தாழ்வு மனப்பான்மை



ஒரு காட்டுகுள்ள டுவீடினு ஒரு குருவி வாழ்ந்துகிட்டு வந்துச்சு.

அந்த குருவி எப்பவும் சந்தோசமா பாட்டு பாடிகிட்டு ,ஜாலியா டான்ஸ் ஆடிக்கிட்டு பறக்கும்போது விசில் அடிச்சிக்கிட்டு ரொம்ப சந்தோசமா இருந்துச்சு.

அந்த காட்டுல வாழ்ந்துகிட்டு வந்த சில பெரிய பறவைகள் ஒரு நாள் டுவீடி அதுபாட்டுக்கு டான்ஸ் ஆடிக் கிட்டு இருக்குறத பார்த்திச்சுங்க.

உடனே டுவீடிய வம்புக்கு இழுக்க ஆரம்பிச்சிதுங்க. ஏய் குட்டி குருவியே எதுக்கு இந்த ஆட்டம் ஆடுற. நீ என்ன இந்த உலகத்திலயே பலசாலியான பறவையா.

இல்ல எங்கள மாதிரி உயரமா பறக்கிற பறவையா எதுக்கு இந்த ஆட்டம்னு கேட்டு சிரிச்சிதுங்க.

அந்த பறவைகள் ரொம்ப கிண்டல் செஞ்சத கேட்ட டுவீடிக்கு ரொம்ப வருத்தமா போச்சு. நாம ரொம்ப குட்டியா இருக்கோம், நம்மளால ரொம்ப உயரம் பறக்க முடியலைன்னு அதுக்கு வருத்தம் வந்திடுச்சு.

அப்பத்தான் அங்க வந்தாரு ஆந்தை தாத்தா. ஏன் இப்படி சோகமா இருக்கிறாய் டுவீடினு கேட்டாரு ஆந்தை தாத்தா.

உடனே நடந்ததை எல்லாம் சொல்ல ஆரம்பிச்சது டுவீடி. இத கேட்ட ஆந்தை சொல்லிச்சு இதுக்கு பேருதான் தாழ்வு மனப்பான்மை, ஒவ்வொரு உயிருக்கும் ஒவ்வொரு குணாதிசயத்தை இந்த கடவுள் கொடுத்திருக்கார். அத சரியா பயன்படுத்தனும்.

அத விட்டுட்டு உன்ன அடுத்தவங்களோட ஒப்பிட்டு பாக்கும்போது நமக்கு தாழ்வு மனப்பான்மை வந்திடும். நீ அழகா பாடுகிறாய, ஆடுகிறாய், இது உன்னோட தனித்தன்மை இதை அந்த பெரிய பறவைகளால் செய்ய முடியாது.

அத விட்டுட்டு அவங்க செய்யிற சாதாரண வேலைய நீ செய்ய முடியலையேன்னு வருத்தப்படுறதுல எந்த பிரயோஜனமும் இல்லைனு சொல்லிச்சு.

இத கேட்ட டுவீடி அடடா இது தெரியாம அவங்க சொல்வதை கேட்டு வருத்தப்பட்டுவிட்டேனே. இனிமே அந்த பறவைகள் வந்தா நான் என்னோட திறமைகளை காட்டி அவங்கள ஜெயிச்சிடுறேனு சொல்லிச்சு.

அதுக்கு ரொம்ப பலமா சிரிச்சாரு ஆந்தை தாத்தா. சிரிச்சிட்டு சொன்னாரு அவுங்க செஞ்ச தப்பையே நீயும் செய்யாத, உன்னோட திறமையை நீ நம்பணுமே தவிர, அத யார்கிட்டயும் நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை, நீ உன்னோட வாழ்க்கையை வாழுனு சொன்னாரு.

நீ இதுமாதிரி தாழ்வு மனப்பான்மைல சிக்கி தங்களோட போட்டி போடணும், அதனால உனக்கு மனஉளைச்சல் வரணும்னே சிலர் உன்கிட்ட தவறா பேசுனா, அவங்கள ஒதுக்கி தள்ளிட்டு உனக்கு, எது சந்தோஷமோ, எது செய்ய முடியுமோ, எது செய்ய விருப்பமோ அதை செய். திரும்ப உன்ன யாராவது வம்பிழுத்தா காது கேக்காத மாதிரி அடுத்த பக்கம் போயிடுனு சொல்லிச்சு அந்த ஆந்தை தாத்தா.

அன்னைல இருந்து டுவீடி அந்த காட்டு பகுதியில ரொம்ப சந்தோசமா வாழ ஆரம்பிச்சிது.அங்க வாழ்ந்துகிட்டு இருந்த மத்த குருவிகளும் டுவீடியோட சேர்ந்து சந்தோசமா வாழ ஆரம்பிச்சுச்சுங்க.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிறருடைய துன்பங்களை நினைத்துப் பார்ப்பதால் நம்முடைய துன்பங்களை சகிக்கக் கற்றுக்கொள்கின்றோம். -மார்க் ட்வைன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புலிகளின் தோல்வி கூட்டமைப்பின் உடைவு தமிழக உறவில் விரிசல்

விடுதலைப் புலிகளை இலங்கை அரசாங்கம் வெற்றி கொண்டது என யார் கூறினாலும் அது அறியாமையின் பாற்பட்டதாகும்.

உண்மையில், விடுதலைப் புலிகளின் அஸ்தமனம் என்பது உள்ளிருந்து ஏற்பட்டது. அதாவது வடக்குக் கிழக்கு என்ற பிரதேசவாதத்தை விதைத்து அதன்மூலம் விடுதலைப் புலிகளின் பலம் உடைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளுக்குள் இருந்த முக்கிய தளபதிகளில் சிலர் புலிகளின் போர் வியூகத்தை – யுக்தியை எதிரிகளிடம் ஒப்புவித்து விட, எதிரியானவன் மிகப்பலம் வாய்ந்த விடுதலைப் புலிகள் அமைப்பை இல்லாதொழித்து விட்டான்.

இவ்வாறு நடந்த உள்ளகக் காட்டிக் கொடுப்பின் விளைவாக, பல்லாயிரக்கணக்கான தமிழ் உறவுகள் உயிரிழந்து போயினர்.

தமிழின விடுதலைப் போராட்டத்தின் தியாகம் அர்த்தமற்றுப் போனது.

எத்தனையோ பேர் காணாமல் போயினர். இன்னும் சொல்ல முடியாத அவலங்களும் விடுதலைப் போராட்டத்துக்கு பங்களிப்புச் செய்த ஒரே காரணத்துக்காக வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கின்ற அவஸ்தையும் இன்று வரை நம் மண்ணில் நீடித்து நிற்கிறது.

இவ்வாறாக விடுதலைப் புலிகள் அமைப்பு அஸ்தமனமாகிப்போக, அதன் அடுத்த கட்டமாக விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைப்பதனூடாக, தமிழ் அரசியலைப் பலவீனப்படுத்த முடியும் என்ற அடிப்படையில் அந்தக் கைங்கரியமும் உள்ளிருந்தே நடத்தி முடிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைக்கப்பட்டதன் பின்னர், இலங்கைத் தமிழரசுக் கட்சி பலமடையும் என்பதான காப்பாப்புகளும் ஆயுதக் குழுக்கள் இல்லாத ஒரு தூய்மையான அரசியல் கட்சியாக இலங்கைத் தமிழரசுக் கட்சி இயங்கும் என்பதாகவும் கூறப்பட்டது.

ஆனால் இப்போது அந்தக் கட்சிக்கு நேர்ந்த கதியை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை இல்லை.

ஆக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்து அதனூடு தமிழரசுக் கட்சியையும் பலமிழக்கச் செய்யும் நரித்தந்திரம் ஒரே மேடையில் அரங்கேற்றப்பட்டுள்ளது.

இதோடு முடிந்து விட்டதா? என்றால் இல்லை. ஈழத் தமிழ் மக்களுக்கு பலமாக இருக்கின்ற தமிழகத்தைப் பகைக்க வைப்பதுதான் அடுத்த கட்ட அரங்கேற்றம்.

அந்த அரங்கேற்றமும் கனகச்சிதமாகச் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

ஆம், கடற்றொழில் ஊடுருவல் மூலமாக தமிழக மீனவர்களையும் ஈழத் தமிழ் மீனவர்களையும் பகைக்க வைக்கும் சதித்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட, இப்போது இரு தரப்பும் குருசேத்திரப் போரில் நிற்பது போன்ற மனநிலையில் உள்ளன.

உண்மை. கிரந்தம் முற்றிப் பௌந்திரமாக்குவதுபோல, இப்போது தமிழக மீனவச் சகோதரர்கள் கச்சதீவுக்கு வரமாட்டோம் எனக் கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

இனி அந்த உறவும் கெட்டுப் போய்விடும் என் செய்வோம் பராபரமே.

## பல்கலைக்கழக கட்டமைப்பின் கீழ் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் - ரணில்

(கொழும்பு)

தொழிற்பயிற்சி நிறுவனங்களை பல்கலைக்கழக கட்டமைப்பின் கீழ் கொண்டு வரவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இரத்மலானை லலித் அத்துலத்முதலி தொழிற்பயிற்சி நிலையத்திற்கு நேற்றுக் காலை மேற்பார்வை விஜயமொன்றை மேற்கொண்டிருந்த போதே இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நவீன உலகிற்கு ஏற்றவாறு தொழில் கல்வியை மறுசீரமைத்து, இந்நாட்டின் இளைஞர் யுவதிகள் போட்டித்தன்மை நிறைந்த உலக தொழில் சந்தையில் வெற்றி பெறுவதற்கு உகந்த சூழல் உருவாக்கப்படும் என உறுதியளித்தார்.

அதற்கமைய, நாட்டின் அனைத்து தொழிற்பயிற்சி நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து ஒரே பல்கலைக்கழக கட்டமைப்பின் கீழ் கொண்டு வருவதோடு, புதிய விடயப்பரப்புகளை உள்ளடக்கிய பாடநெறிகளை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது டிஜிட்டல் மாற்றத்திற்கான முன்னெடுப்புகள் துரிதமாக இடம்பெற்று வருவதோடு, இதன்போது செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட துறைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் எனவும், நாளாந்தம் மாற்றமடையும் தொழில்நுட்பத்துடன் முன்னேறிச் செல்ல வேண்டும் என்பதே இலங்கையின் எதிர்பார்ப்பு எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். (ம-7)

## சுகாதார சீர்கேடுகளுடன் வல்வெட்டித்துறையில் உணவகம்

### உரிமையாளருக்கு 21 ஆயிரம் ரூபா தண்டம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையில் சுகாதார சீர்கேடுகளுடன் உணவகம் நடத்திய உரிமையாளருக்கு 21 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வல்வெட்டித்துறை பொதுச் சுகாதார பரிசோதகரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையில் 21 ஆயிரம் தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

தொடர்ந்து சுகாதாரத்திற்கு ஊறு விளைவிக்க கூடிய வகையில் உணவகத்தை நடாத்தியமை உட்பட 7 குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் உரிமையாளரிற்கு நேற்று நீதிமன்றால் தண்டப்பணம் அறவிடப்பட்டது.

அதேவேளை, வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் ஆளுகைக்குட்பட்ட செல்வச்சந்நிதி ஆலயத்தின் சுற்றுச் சூழலில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வல்வெட்டித்துறை பொதுச் சுகாதார பரிசோதகரினால் கடந்த மாதம் 5 ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இம்மாதம் 16 ஆம் திகதி விசாரணை இடம்பெற்றதை தொடர்ந்து சுகாதாரத்திற்கு ஊறு விளைவிக்க கூடிய வகையில் கரப்பான் பூச்சி மற்றும் புழுக்களுடன் உணவகத்தை நடாத்தியமை உட்பட 12 குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் உரிமையாளரிற்கு 36,ஆயிரம் தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

மேற்குறித்த வழக்கானது நேற்று மன்றிற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பொதுச்சுகாதார பரிசோதகரினால் மூடுவதற்கான கட்டளையை பெறுவதற்கான விண்ணப்பம் செய்யப்பட்டிருந்ததுடன் வழக்கானது கட்டளைக்காக மார்ச் 7 அன்று திகதியிடப்பட்டது. (ம-7)

## ஜனாதிபதி பதவிக்கு ரணிலை தவிர பொருத்தமானவர் எவரும் இல்லை

### அமைச்சர் டிரான் அலஸ்

(கொழும்பு)

தற்போதைய நிலையில் ஜனாதிபதி பதவிக்கு ரணில் விக்கிரமசிங்கவைத் தவிரப் பொருத்தமானவர் எவரும் இல்லை என்று அமைச்சர் டிரான் அலஸ் புகழாரம் சூட்டியுள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டிரான் அலஸ்,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே நாம் அனைவரும் ஆதரவு வழங்குவுள்ளோம். அவர்தான் வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும்.

இந்த நாட்டை வீழ்ச்சியடைந்த நிலையில் இருந்து மீட்டெடுக்கவும், வரிசை யுகத்தை முடிவுக்கு கொண்டு வரவும் ஜனாதிபதியால் முடிந்தது.

அந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்டவர்கள் வேறொரு ஜனாதிபதியைப் பற்றி சிந்திக்கக் கூடாது என்பதே எமது கருத்தாகும் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## தேர்தலை எப்படி நிறுத்தலாம் என யோசிக்கின்றது அரசு

### டலஸ் அழகப்பெரும குற்றச்சாட்டு

ரணில் அரசுக்குத் தேர்தலை நடத்துவதற்கு விருப்பம் இல்லை. இந்த அரசு தேர்தல் அச்சத்தில் உள்ளது. எப்படித் தேர்தலை நிறுத்தலாம் என்று ரணில் அரசு யோசிக்கின்றது என சுதந்திர மக்கள் சபையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும், "எந்தத் தேர்தல் முதலில் நடக்கும்? ஜனாதிபதித் தேர்தலா? நாடாளுமன்றத் தேர்தலா?" என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கும்போது,

"எந்தத் தேர்தலையும் நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு விருப்பம் இல்லை.

இந்த அரசு தேர்தல் அச்சத்தில் உள்ளது. வரலாற்றில் முதல் தடவையாக இரண்டு தேர்தல்களை ஒத்திப்போட்டுள்ளது. வரலாற்றில் நாடாளுமன்றத் தேர்தலை 6 வருடங்களுக்கு ஒத்திப்போட்டது இந்த ஐக்கிய தேசிய கட்சி.

ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிவதற்கு ஒரு மாதம் இருக்கும்போது ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என்று அரசியலமைப்பு சொல்கின்றது என தெரிவித்துள்ளார்.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை **காலை 09:00 மணியிலிருந்து மாலை 5:00 மணிவரை கிளிநொச்சி பிரதேசத்தில்** அக்கராயங்குளம் தொலைத்தொடர்பு கோபுரம்(652ஆம் படைப்பிரிவு),ஆனைவிழுந்தான்,ஆரோக்கியபுரம், ஜெயபுரம் தேவாலயம், ஜெயபுரம் பாடசாலை,ஜெயபுரம்,மணியங்குளம், நாகப்படுவான், பல்லவராயன்கட்டு,... சோலை ... மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

08

### பறை என்ற சொல்லின் வினைப்பயன்பாடுகள்

பறை = சொல், பறைதல் = சொல்லுதல், பறைஞ்சன் = சொன்னேன், பறைஞ்சவன் = சொன்னவன் (சொன்னான்), பறையாதே = சொல்லாதே, பேசாதே, பறையிறான் = சொல்கிறான், பொய்பறையாதே = பொய் சொல்லாதே, அவன் என்ன பறஞ்சவன் = அவன் என்ன சொன்னான் அவனிட்ட பறையாதே = அவனிடம் சொல்லாதே, இவ்வாறு பறை எனும் வேர்ச்சொல்லுடன் தொடர்புடைய பல சொற்கள் அல்லது பலச் சொல்லாடகள் உள்ளன. அவை இன்றும் யாழ்ப்பாணத்தவர் பேச்சு வழக்கில் அழியாமல் இருப்பது யாழ்ப்பாணப் பேச்சு தமிழின் தனிச்சிறப்பாகும். தமிழுடன் நெருங்கிய மரபுத்தொடர்பு கொண்டகிளை மொழியான மலையாளத்திலும் இச்சொல் புழக்கத்தில் உள்ளது.

ஒரு செய்தியை அல்லது ஒரு தகவலை ஒருவரிடம் சொன்னால், அவர் அதனை (இரகசிய மாகப் பேணாமல்) எல்லா இடங்களிலும் சொல்லித்திரிபவரானால், அவரை "பறை", "பறையன்", "பறையன் போன்று" எனும் அடைமொழிகளுடன் பேசுவதும் மேற்குறித்த பறை எனும் வினைச் சொல்லின் பயன்பாட்டின பின்னனியே அடிப்படைக் காரணங்களாகும்.

இச்சொல்லின் (பறையா) பயன்பாடு இலங்கை சிங்களவர் மத்தியில் சாதியப் பெயராகவும், இரகசியம் பேணாதவரை இடித்துரைக்கும் சொல்லாகவும் பயன்படுகிறது.

### பிறமொழிச் செல்வாக்கு போத்துக்கேய மொழிச் செல்வாக்கு

யாழ்ப்பாணம் 1591 ஆம் ஆண்டிலிருந்து 1620 வரை போர்த்துக்கேயர் செல்வாக்கின் கீழும் 1620 தொடக்கம் 1658 வரை அவர்களின் நேரடி ஆட்சியிலும் இருந்தது. யாழ்ப்பாணத்துடன் தொடர்பு கொண்ட முதல் மேல் நாட்டவர் இவர்களே ஆனதால், பல மேல் நாட்டுப் பொருட்களும் கருத்துருக்களும் யாழ்ப்பாணத்தில் அறிமுகமானது இவர்கள் மூலமேயாகும்.

இவற்றுடன் போர்த்துக்கேய மொழிச்சொற்கள் சிலவும் யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் கலந்துள்ளன. தமிழ் நாட்டில் போர்த்துக்கேயர் செல்வாக்கு மிகவும் குறைவாகவே இருந்தனால், யாழ்ப்பாணத்தைப் போல், தமிழ் நாட்டுப் பேச்சுத் தமிழில் போர்த்துக்கேய மொழிச் சொற்கள் அதிகம் ஊடுருவவில்லை.

அவ்வாறான சில சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவை அலுமாரி, அன்னாசி, ஆசுப்பத்திரி, கடுதாசி (கடிதம்), கதிரை, குசினி, கோப்பை, சப்பாத்து, தாச்சி, துவாய், தோம்பு, பாண், பீங்கான், பீப்பா, பேனை, வாங்கு, விசுக் கோத்து, விறாந்தை ஆகும்.

### டச்சு மொழிச் செல்வாக்கு

ஒல்லாந்தர் 138 ஆண்டுகள் யாழ்ப்பாணத்தை முழுமையாக ஆண்ட போதிலும், போர்த்துக்கேய சொற்களைப்போல் டச்சுமொழிச் சொற்கள் யாழ்ப்பாணத்தமிழில் அதிகம் இடம்பெறவில்லை. எனினும் சில டச்சுச் சொற்கள் இன்னும் இங்கே புழக்கத்தில் இருந்துதான் வருகின்றன.

கக்கூசு (கழிப்பறை), கந்தோர் (அலுவலகம்), காமரா அல்லது காம்பறா (அறை), தேத்தண்ணி (தேநீர்) போன்ற சொற்கள் டச்சு மொழியிலிருந்து வந்தவையாகும்.

### ஆங்கில மொழிச் செல்வாக்கு

ஆங்கிலேயர் யாழ்ப்பாணத்தை 150 ஆண்டுகளுக்கு மேல் நேரடியாக ஆட்சி செய்தனர். பரந்த ஆங்கிலக் கல்வி வாய்ப்புக்களை அளித்த தன் மூலம் யாழ்ப்பாணச் சமுதாயத்தில் ஆங்கிலம் நிலையான ஒரு இடத்தைப் பெற வழிவகுத்தனர். விடுதலைக்குப் பின்னரும், மேலைத் தேசப் பண்பாட்டுச் செல்வாக்கும், உலகமயமாதலும், ஆங்கிலத்தின் செல்வாக்கை யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி உலகம் முழுவதிலும் நிரந்தரமாக்கியுள்ளது.

மேலும் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலம் அறிவியலிலும், தொழில் நுட்பத்திலும் ஐரோப்பா துரித வளர்ச்சியைக் கண்டகாலம். ஏராளமான புதிய பொருட்களும், கருத்துக்களும் உருவாகி உலகம் முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டன. இதற்கான ஊடகமாக அமைந்தது ஆங்கிலமே. இதனால் இவையனைத்தும் ஆங்கிலப் பெயர்களுடனேயே அறிமுகமாயின. ஆங்கிலத்தில் கல்விகற்று அம் மொழியிலேயே சிந்திக்கத் தொடங்கிய ஒரு குழுவினர் யாழ்ப்பாணத்திலும் உருவாயினர்.

இவ்வாறான நிலைமை உள்ளூர் மொழியில் பெருமளவிலான ஆங்கில ஊடுருவலுக்கு வழி சமைத்தது. வாழ்க்கையின் எல்லா அம்சங்கள் தொடர்பிலும், எல்லா மட்டங்களிலும் ஆங்கிலச் சொற்கள் பேச்சுத் தமிழில் பயன்படுத்தப்படுகின்றன.

எழுத்து மொழியில் தமிழ்ச் சொற்கள் உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வந்தாலும் பேசும் போது மக்கள் பெருமளவில் ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தியே வருகின்றனர். பஸ், ஐஸ்கிறீம், சைக்கிள், மோட்டார், சினிமா, கமரா, ஸ்ருடியோ என நூற்றுக் கணக்கான ஆங்கிலச் சொற்களை யாழ்ப்பாண மக்கள் தமிழ்ச் சொற்கள் போலவே பயன்படுத்தி வருவதைக் காணலாம்.

### வேறு மொழிச் சொற்கள்

முன் சொல்லப்பட்டவர்கள் தவிர்ந்த பிற வெளிநாட்டாருக்கு யாழ்ப்பாணத்துடன் நேரடித் தொடர்பு கிடையாது. எனினும் தமிழ் நாட்டில் தமிழுக்கு அறிமுகமாகிய பல திசைச் சொற்களில் சில யாழ்ப்பாணத்திலும் பயன்பாட்டிலுள்ளன.

தமிழ் நாட்டில் பாரசீகமொழி, ஹிந்தி, உருது, அரபி ஆகிய மொழிகளிலிருந்து பல சொற்கள் பேச்சுத் தமிழில் புழங்குகின்றன. இவற்றுட் சில யாழ்ப்பாணத்தில் செய்தித்தாள்கள், வானொலிகள் ஊடாக எழுத்துத் தமிழில் புழங்கினாலும், பேச்சுத் தமிழில் மிகக் குறைவாகவே பயன்படுத்தப்படுகின்றன. பதிலாகத் தமிழ்ச் சொற்களோ ஆங்கிலக் கடன் சொற்களோ பயன்படுகின்றன. (யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழ் பற்றிய விபரம் இணையத்தில் இருந்து எடுக்கப்பட்டவையாகும்.)

### மட்டக்களப்புப் பேச்சுத் தமிழ்

இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டப் பகுதிகளில் பேசப்படும் தமிழ் மட்டக்களப்புப் பேச்சுத்தமிழ் என்றழைக்கப்படுகிறது. இலங்கையில் வழக்கத்திலுள்ள பேச்சுத் தமிழ் வழக்குகளில் மட்டக்களப்புப் பேச்சுத் தமிழ் இப்பிரதேசத்திற்கே உரிய வட்டார வழக்குகள் கொண்டு தனி ஒரு பேச்சு வழக்காகத் திகழ்கிறது. மட்டக்களப்பு பேச்சுத் தமிழ் யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழ் மற்றும் இலங்கையின் திருகோணமலை, கொழும்பு, மலையகப் பிரதேசங்களில் வழக்கத்திலுள்ள பேச்சுத் தமிழில் இருந்து குறிப்பிடத்தக்களவு வேறுபட்டுக் காணப்படுகிறது.

மட்டக்களப்பு தமிழர்கள் எவ்வாறு பூர்வீகக் குடிகளோ அவ்வாறே அவர்கள் பேசும் தமிழ் செந்தமிழாகப் போற்றப்படுவதற்கு வடமொழிக் கலப்பு மிகவும் குறைவாக இருப்பது ஒரு காரணமாகும் என பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்கள் மட்டக்களப்பு மாநாட்டு நினைவு மலர்- 1996 இல் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்புப் பேச்சுத் தமிழானது மட்டக்களப்புக்கே உரியதாயினும் நகர மற்றும் கிராமங்களில் தன்னகத்தே சற்று வேறுபட்டுக் காணப்படுகின்றது. கல்வி, அபிவிருத்தி பிற சமூகத்தினருடனான தொடர்புகள் என்பன இதற்குக் காரணம் எனலாம். முஸ்லிம்கள் சமூகத்தை அண்டிய பிரதேசத் தமிழர்களின் பேச்சுத் தமிழ் முஸ்லிம்களின் பேச்சுத் தமிழிலுள்ள சொற்களைக் கொண்டதாகவும் கிராமங்களில் பண்டைய தமிழ்ச் சொற்கள் மாறாமலும் நகரத்திலுள்ள பேச்சு வழக்கில் ஆங்கில சொற்களின் பாவனை அதிகமாக இருப்பதும் குறிப்பிடத்தக்க விடயங்கள்.

மட்டக்களப்புப் பேச்சுத் தமிழ் கிழக்கு மாகாணத்திலுள்ள இலங்கைத் தமிழர், இலங்கைச் சோனகர், போர்த்துக்கல் பறங்கியர், கரையோர வேடர்கள் ஆகியோரிடையே பேசப்படுகின்றது. திருகோணமலை பேச்சு வழக்கு யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழை ஒத்துக் காணப்படுகிறது. ஆயினும் திருகோணமலை பேச்சுவழக்கு மட்டக்களப்பு பேச்சு வழக்குடன் நில அமைவு போன்ற காரணங்களினால் நெருங்கிய தொடர்புடையது.

கமில் சுவெலபில் என்ற மொழியியலாளரின் கருத்துப்படி மட்டக்களப்புப் பேச்சுத் தமிழ், பேசப்படும் எல்லா தமிழ் வழக்குகளிலும் அதிகம் இலக்கியத் தன்மை வாய்ந்ததாகவுள்ளது என்கிறார். இது சில பழைய பண்புகளைப் பாதுகாக்கின்றது. சில கவர்ச்சியூட்டும் மாறுதல்களை மேம்படுத்துகையில் தமிழின் ஏனைய வழக்குகளை விட இது உண்மைத் தன்மையான இலக்கிய விதிமுறையைத் தக்க வைத்துள்ளது. (தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## துன்னாலையில்...

மதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் துன்னாலை தெற்கைச் சேர்ந்தவர்களான விஜயபாலா வின்சன் (வயது-28) என்பவர் கைப்பகுதியில் வெட்டுக் காயங்களுடனும் ராசபாலா றஜீவன் (வயது-19) என்பவர் தலைப் பகுதியில் வெட்டுக் காயங்களுடனும் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7,60)

## கடந்த ஒரு...

வர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை குறித்த சந்தேகநபர்களுக்கு நீதிமன்றங்களினால் பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 301 நபர்களும், சாதாரண பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 230 நபர்களுமே பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முற் படுத்தப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## உட்கட்சி முரண்...

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம்சிறீதரனை அழைத்து, யாழ் இந்தியத் துணைத்தூதரகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை சந்திப் பொன்றை நடத்தியிருந்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டமைக்காக சிறீதரனுக்கு வாழ்த்துரைத்த அவர், கட்சியின் உள்ளக முரண்பாடுகளைக் களைந்து, அடுத்தகட்ட நகர்வுகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் இணைந்திருந்த இச் சந்திப்பில் ஈழத்தமிழர் நலன்சார் விடயங்களில் இந்தியாவின் முறையான வகிபங்கை உறுதிப்படுத்த வேண்டியுள்ளதன் அவசியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## வடபகுதியில்...

இதன் காரணமாக வடபகுதியின் மிகப்பெரும் வளமான தென்னை வளம் முற்று முழுதாக அழிந்து போகின்ற ஆபத்தை எதிர்கொண்டுள்ளது.

இதேவேளை எந்தக் காலத்திலும் இல்லாதவாறு வடபகுதியில் வெள்ளை ஈக்கள் எவ்வாறு உள்நுழைந்தன என்பது குறித்தும் பலத்த சந்தேகம் எழுந்துள்ளதுடன், வடபகுதியின் தென்னை வளத்தை முற்றுமுழுதாக அழிக்கும் வெள்ளை ஈக்கள் இங்கு பரப்பப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தை துறைசார் நிபுணர்கள் எழுப்பியுள்ளனர்.

இச்சந்தேகத்தை வலுப்படுத்துவதுபோல தென்னைகளை அழிக்கின்ற கட்டத்துக்கு வெள்ளை ஈக்கள் பரவியுள்ள போதிலும் அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் இன்னமும் மந்தமாகவே இருப்பதாகவும் சம்பந்தப்பட்ட நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ம)

## கச்சதீவு...

கச்சதீவு புனித அந்தோனியார், தேவாலயத்தின் வருடாந்த திருவிழா, இன்றும் நாளையும் நடை பெறவுள்ளது.

கச்சதீவு புனித அந்தோனியார், தேவாலயத்தின் வருடாந்த திருவிழாவுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் ஏ. சிவபால சுந்தரம் தெரிவித்தார்.

இதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.சிவபாலசுந்தரத்திடம் வினவியபோது,

இதற்கு பதிலளித்த அவர், உணவு, குடிநீர் வசதிகள் கடற்படையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

மேலும் கச்சதீவு திருவிழாவிற்காக நயினாதீவில் இருந்து 19 படகுகளும், அனலைதீவில் இருந்து 05 படகுகளுமாக 24 படகுகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடவுள்ளது. இவற்றுள் ஒன்று ஊர்காவற்றுறை துறைமுகத்தில் இருந்தும், ஏனைய படகுகள் குறிகாட்டுவான், இறங்குதுறையில் இருந்தும் காலை 5.30 மணி தொட கம் ஆரம்பமாகவுள்ளது.

இத்திருவிழாவிற்கான ஏனைய ஒழுங்குகள், பாதுகாப்புகள் வழமை போல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

## காதலர் தினத்...

கணவர் உள்ளிட்ட இருவர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டனர்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 25 வயதான ஆணும் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 49 வயதான பெண்ணுமே காங்கேசன்துறை பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

காதலர் தினத்தன்று வல்வெட்டித்துறை பகுதியில் முதியவர்கள் உள்ள வீட்டினுள் 29 பவுண் நகைகள் திருடப்பட்டன. இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் யாழ். நகரப் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை நகைக்கடை ஒன்றில் 4 பவுண் நகையை விற்பனை செய்ய வந்த பெண்ணொருவர் மீது கடை ஊழியர்கள் சந்தேகமடைந்து பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

தகவலின்பிரகாரம்கடைக்கு விரைந்த பொலிஸார் பெண்ணை கைது செய்து, அவரிடம் இருந்த 4 பவுண் நகையையும் கைப்பற்றி இருந்தனர். கைது செய்யப்பட்டபெண்ணை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்தபோது, தனக்கு நகைகளை தந்து விற்பனை செய்ய கூறியநபரை அடையாளம்காட்டினார். பெண்ணின் வாக்குமூலத்தின் பிரகாரம் அந்நபரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தபோது, அவரே வல்வெட்டித்துறை வீட்டில் திருட்டில் ஈடுபட்ட பிரதான சந்தேக நபர் என தெரிய வந்துள்ளது.

குறித்த சந்தேக நபரிடம் இருந்து 25 பவுண் தாலிக் கொடி மீட்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட இரு நபர்களிடமும் பொலிஸார் விசாரணை களை தொடர்ந்து முன்னெடுத்துள்ளனர். (ம-7,33,60)

## யாழில்...

நின்ற மோட்டார் சைக்கிளையும் தீக்கிரையாக்கிச் சென்றது.

குறித்த சம்பவம் யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, கலட்டிச் சந்திக்கு அண்மையில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் நடைபெற்றுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

குறித்த வீட்டின் உரிமையாளர் அவரது மகன் மற்றும் மகனின் நண்பர்கள் இருந்தவேளை மோட்டார் சைக்கிளில் வந்த வாள்வெட்டு குழு மூவரை வாளால் வெட்டியதுடன் வீட்டுக்கு பெற்றோல் குண்டை வீசி எரியூட்டியதுடன் அங்கு நின்ற விலையுயர்ந்த மோட்டார் சைக்கிளுக்கும் தீ வைத்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

வாள்வெட்டுத் தாக்குதலுக்கு இலக்காகி மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

லக்கி 7 VIP
திகதி 2024.02.22
சீட்டிழுப்பு இலக்கம் 0224
E 2 1 1 2 1 2 E

தன நிதானய
திகதி - 2024.02.22
சீட்டிழுப்பு இலக்கம் - 1428
V 14 18 67 69 V
Double Chance 72670

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3640
சீட்டிழுப்பு திகதி 22.02.2024
A 18 55 56 57
A 51530

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.02.22
சீட்டிழுப்பு இலக்கம் 0707
கன்னி 09 20 30 38 கன்னி
40941 30

மஹஜன சம்பத
திகதி 2024/02/22
சீட்டிழுப்பு இலக்கம் 5398
L 3 7 2 9 6 2

மெகா பவர்
திகதி 22/02/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1746
N 21 04 37 63 69
76663

உத்தியோகபூர்வ முடிவுகள்
22.02.2024 வெற்றி வாரம் 106 வர்ணம் ஊதா
A W 5 9 9 8 2 0
29,626,940.00
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2372 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.02.22 தினம் வியாழக்கிழமை
03 13 15 65 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 74,160,590.40

சனிதா
திகதி 2024.02.22 வெற்றி வாரம் 4533 வர்ணம் சிவப்பு
44 45 53 72 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,667,756.80

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4084 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.02.22 தினம் வியாழக்கிழமை
11 22 41 50 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,130,510.40

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
V 30 11 33 39 58
1548 அரஞ்சு நிறம் 22.02.2024 வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 507,679,302.20

ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2198
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 93,333,049.60
26 35 45 57 Y

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

புத்தூர் மட்டுவில் பிரதான வீதியோரம்
2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
20 அடி பாதையுடன் காணிதுண்டுகள்
விற்பனைக்கு உண்டு.

**2 பரப்பு - 5 இலட்சம்**

இன்னும் 25 துண்டுகள் மாத்திரம் உண்டு.

பார்வையிடும் நேரம் :
காலை 8.30 தொடக்கம் 6.00 வரை

மேலதிக விபரங்களுக்கு
**074 260 0617, 076 109 8504**
(19215)

## DISH ANTENNA TECHNICIANS தேவை

கொழும்பில் இயங்கிவரும் SATELLITE மற்றும் கேபிள் டி.வி உபகரணங்கள் விற்பனை மற்றும் சர்வீஸ் செய்யும் கடைக்கு டிஷ் ஆன்டென்னா பிட்டிங் செய்யக்கூடிய மற்றும் ELECTRONICS TECHNICIANS தேவை.தங்கி இருந்து வேலை செய்யக்கூடிய இருவர் தேவை. உணவு தங்குமிடம் மற்றும் திறமைக்கு எற்ப சம்பளம் மற்றும் மேலதிக வேலைக்கான கொடுப்பனவுகள் கிடைக்கும், உடன் தொடர்புகொள்ளவும்.

**ராஜன் 077 771 0785**
(19223)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

## மற்றுமொரு புதிய பஸ் சேவை ஆரம்பித்துள்ளனர்

**Village Hotel Jaffna Express**

அச்சுவேலி → புன்னாலைக்கட்டுவன் →
உரும்பிராய் → திருநெல்வேலி →
யாழ்ப்பாணம் → கொழும்பு

கட்டணம் - 2700/=

தொடர்புகளுக்கு
**077 544 8503**
(19118)

## IELTS - 24.02.2024 New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி,
**Brown Rd, Jaffna.**
077 798 9830 By:-B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (19193)

## நீங்கள் கடுமையாக இருமல், சளி மற்றும் இளைப்பினால் அவதிப்படுகின்றீர்களா?

**இன்றே பாவியுங்கள்**

சித்தாரா
துளசி
அசமோதகம் பாணி

ஆதிகால தேசிய ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்தஅற்புத பாணி நுரையீரல், சுவாச நாளங்களில் இருக்கும்சளியைப் போக்குவதுடன் இருமல், சளி, இளைப்பு, வாய்வு,அஜீரணம் போன்ற நோய்களிற்கு உடன் நிவாரணம் வழங்கும்.

**யாழ். குடா நாட்டின் அனைத்து பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

Manufactured By:
SITHARA
SIDDHAYURVEDA
PHARMACY. (C-8398)

சந்தைப்படுத்துவோர்:
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி : 021 222 2567
(குறிப்பு : சந்திரச்சந்திக்கு அண்மையில்)

## காணி விற்பனைக்கு

இராசபாதை வீதியில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
**077 986 5457**
(19213)

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-8399)

## Sales Rep தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நிறுவனமொன்றிற்கு Sales rep தேவை. அனுபவமுள்ளவர் மற்றும் Moterbike உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

T.P: **077 171 8777**
Email: admin@mbilk.com
(19230)

## சாரதி தேவை

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.


சம்பளம்: 40'000/-





வயது: 21 முதல் 40 வரை
தொடர்புக்கு:-
0777068777
(C-8399)


# மரண அறிவித்தல்



தோற்றம்
1936 - 08 - 26

மறைவு
2024 - 02 - 22

## இராசையா கணபதிப்பிள்ளை

**(சின்னமுத்து சாமியார்)**

அல்வாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் அல்வாய் வடக்கு பெரியதம்பிரான் கோவிலடி மாயக்கையை வதிவிடமாகவும் கொண்ட இராசையா கணபதிப்பிள்ளை அவர்கள் 22.02.2024 வியாழக்கிழமை அன்று காலமானர்,

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சிவகாமிப்பிள்ளையின் அன்புக் கணவரும் புவனேஸ்வரி(ஓய்வுநிலை அதிபர்), சிவராஜா(கள மேற்பார்வையாளர் RDA), கோமதி(லண்டன்), தர்மவதி(பிரான்ஸ்), றஞ்சனாமதி(தொழில்நுட்ப உத்தியோகத்தர்), சிவனேஸ்வரி(ஆசிரியை), ஜெயரூபன்(தொழில்நுட்ப உத்தியோகத்தர்), சுதர்ஜினி(அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தயாநிதி, மதுமதி(அமரர்), உதயராணி, செல்வச்சந்திரன்(அமரர்), கதிர்காமசேகரம், அஞ்சனகுமார், பகீரதன், அபிராமி, தவரூபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (25.02.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பெரியதம்பிரான் கோவிலடி,
மாயக்கை, அல்வாய் வடக்கு,
அல்வாய்.

தகவல் :
குடும்பத்தினர்
077 711 5332, 076 623 2849
(C-8396)

நீங்காத நினைவுகளுடன்

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
17 . 04 . 1947

மறைவு
08 . 03 . 2020

அமரர்

## Lion வைரமுத்து சுப்பிரமணியம்

[ முன்னாள் சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர் (K.K.S),
முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ( வலிகிழக்கு ) ]

திதி : 23.02.2024

அன்பின் உருவமாய் பாசத்தின் இருப்பிடமாய் அரவணைப்பில் சிகரமாய் என்றும் புன்னகைத்த முகத்துடன் உற்றார் உறவினர்க்கு என்றும் உதவிக்கரம் நீட்டி தன் குடும்பத்தினர் எல்லோரினதும் சீர் சிறப்பிற்கும் வழிகாட்டி கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும் உங்கள் ஆத்மா என்றும் இறைவன் திருவடியில் இன்புற்றிருக்க இறையருளை வேண்டி மலர்தூவி அஞ்சலிக்கின்றோம்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

இங்ஙனம்
குடும்பத்தினர்
(19195)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org